
# தொழிலாளி

இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் ஒரே வார இதழ்

மலர் 2 இதழ் 34 | மே, 1, 1964 | பக்கங்கள் 12 | விலை சதம் 10

சமாதானம், முன்னேற்றம், தேசிய சுதந்திரம், சோஷலிசம் ஆகியவற்றிற்காக நிற்கும் சக்திகள் மகத்தான வெற்றிகள் ஈட்டியுள்ள வேளையில் 1964 மேதினம் கொண்டாடப்படுகிறது.

## ஏகாதிபத்திய எதிர்ப்பில் வாலிபர்



தோழர் டபிள்யு. ஏ. தர்மதாஸ

“காலனி-நவீன காலனி ஆதிக்கத்தை எதிர்த்து ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள் நடத்தும் போராட்டத்தைப் பலப்படுத்தும் பணியில் உலக வாலிபர்களுடன் இணைந்து கம்யூனிஸ்ட் மற்றும் ஈழத்து வாலிபர்களும் போராட வேண்டுமென்பதை நினைவுறுத்துகிறது ஏப்ரல் 24ம் திகதி’’

போராட்ட உணர்வுமிக்க நம் இளைஞர்கள் ஈழத்தில் இதுவரை கண்ட களம் பல— இதன் அனுபவத்தைக் கொண்டு உலகத்தின் முதல் எதிரியான ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முறியடிக்க இன்றே சங்கற்பம் செய்வோம்.

இவ்வாறு 24-4-64-ல் நடந்த ‘காலனியாதிக்க எதிர்ப்புக் கூட்டத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் டபிள்யூ. ஏ. தர்மதாஸ குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் திரு. ருெபட் குணவர்த்தன, தோழர்கள் பிரேமலால் குமாரசிரி என். சண்முகதாசன், ஆனந்த குமர ஆகியோரும் உரை நிகழ்த்தினர். சம்மேளனத்தின் தலைவர் தோழர் அமரபால கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

# புதிய உலகம் படைப்போம்

## ஏகாதிபத்தியத்தை ஒழிப்போம்

## கம்யூனிஸ்ட் மேதின வாழ்த்து


ஏகாதிபத்திய, யுத்த சக்திகள் பலமுனைகளிலும் பின்வாங்க நிர்ப்பந்திக்கப் பட்ட வேளையிலும் முடிவான சமாதானத்தையும் பொருளாதார முன்னேற்றத்தையும் உத்தரவாதப்படுத்தும் முறையில் முழு உலகிலும் ஏகாதிபத்தியம் பூரணமாக ஒழிக்கப் படக்கூடிய நிலைமை உருவாகியுள்ள வேளையிலும் இவ்வாண்டு மே தினம் கொண்டாடப்படுகிறது.

தேசிய ரீதியிலும் தொழிலாளவர்க்க இயக்கம் புரட்சிகர முன்னேற்றம் காணும் சாத்தியப்பாடு முன்னென்றுமில்லாதவாறு திகழ்கின்றது. தொழிற்சங்கத் துறையில் கூட இத்தகைய ஐக்கியம் முன்னெப்பொழுதும் இருந்ததில்லை.

இம் மே தினத்தில் சர்வதேச தொழிலாள வர்க்கத்திற்கும் குறிப்பாக உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தில் இணைந்துள்ள தொழிலாளர்கட்கும் நாம் எமது தோழமை நிறை புரட்சிகர வாழ்த்துக்களைத்தெரிவிக்கின்றோம். சீன நாட்டு அரசாங்கத்திற்கும், மக்களுக்கும், தொழிலாளவர்க்கத்திற்கும் அதன் தலைமையில் நவீன திரிபுவாதத்தின் நாசகர ஊடுருவலை எதிர்த்தும், உண்மை மர்க்சிஸ லெனினிஸத்தைப் பாதுகாக்கவும் மேதை மா சே-துங்கின் தலைமையில் உலகம் தழுவிய போராட்டம் நடாத்தும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் நமது புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதே போன்றே மாக்சிஸ-லெனினிஸக் கொள்கைகளைக் கடைப்பிடித்து பாதுகாத்து சோஷலிச நிர்மாணத்தில் வெற்றி கண்டு கொண்டிருப்பதற்காக அல்பேனியா, வடகொரியா, வட வியட்நாம், கியூபா ஆகிய நாடுகளின் அரசாங்கங்களுக்கும், மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் எமது புரட்சிகர வாழ்த்துக்கள். தமது தமது நாடுகளில் நவீன திரிபுவாதத்தை எதிர்த்து துணிகரமான, கஷ்டமான போராட்டங்களில் ஈடுபட்டிருக்கும் மாக்சிஸ-லெனினிஸ வாதிகளுக்கும் எமது வாழ்த்துக்கள்.

குருஷ்சோவின் மாக்சிஸ-லெனினிஸ விரோத, திரிபுவாதக் கொள்கைகளினுல், மக்களின் புரட்சிகர நடவடிக்கைகளால் விளைந்த வெற்றிகளுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ள சோவியத் நாட்டு மற்றும் சோஷலிச நாடுகளின் மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் எமதுவாழ்த்துக்களைத்தெரிவிக்கின்றோம். அவர்கள் இத்தகைய தீங்கான, தவறுன கொள்கைகளைத் தமது நாடுகளிலிருந்து ஒழித்து உண்மையான மார்க்ஸிஸ — லெனினிஸ வாதிகளின் பாதைக்கு விரைவில் திரும்புவார் என எதிர்பார்க்கின்றோம்.



தோழர் பிரேமலால் குமாரசிறி (பொதுச் செயலாளர், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி)

அண்மையில் விடுதலையடைந்த நாடுகளின் மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும், காலனி அரைக் காலனி நாடுகளில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சுதந்திரத்துக்காக வீரப்போர் நடத்தும் புரட்சிகர மக்களுக்கும் எமது வாழ்த்துக்கள்.

இலங்கையில் வலதுசாரி சக்திகள் பலமுறுவதை எதிர்த்தும், ஸ்ரீ லங்கா அரசாங்கத்தின் தொழிலாள வர்க்க விரோதக் கொள்கைகளை எதிர்த்தும், முற்போக்கு சக்திகளின் ஐக்கியத்தின் அடிப்படையிலும் பிரதானமாக தொழிலாள—விவசாயிகள் ஐக்கியத்தின் அடிப்படையிலும் தொழிலாளவர்க்கத் தலைமையில் முற்போக்கு அரசாங்கத்தை அமைப்பதற்காகவும் போராடும் தொழிலாளர்கட்கும் விவசாயிகட்கும் மற்றும் முற்போக்குப் பகுதிகளுக்கும் எமது வாழ்த்துக்கள்.

தொழிலாள வர்க்கத்துள் சீர்திருத்தவாத — திரிபுவாதக் கருத்துக்களைப் புகுத்தி வர்க்கப் போராட்டப் புரட்சிப் பாதையை மறுத்து தொழிலாளவர்க்கத்தின் போராட்ட நடவடிக்கைகளுக்குத் துரோகம் செய்ததுமட்டுமல்லாமல் தொழிலாள வர்க்கம் சமாதான முறையில் அதுவும் பாராளுமன்றப் பாதைமூலமே அரசாங்க அதிகாரத்துக்கு வரமுடியும் என்ற அபாயகரமான மயக்கத்தை பரப்பியும், மக்கள் விரோத ஸ்ரீ லங்கா அரசாங்கத்துக்கு இன்று முண்டுகொடுக்க நடவடிக்கைகள் எடுத்துவரும் இடதுசாரி இயக்கத்தின் பகுதிகள் பற்றித் தொழிலாள வர்க்கத்துக்கு நாம் எச்சரிக்கை விடுகிறோம்.

இந்த சீர்திருத்தவாத, திரிபுவாதக் கருத்துக்களை உதறித்தள்ளி, பாரம்பர்யமான போராட்ட புரட்சிகர உணர்வைக் கைக்கொள்ளும்படியும், வெகுஜன நடவடிக்கை மூலம் இன்றைய அரசியல் நெருக்கடியிலிருந்து மீளும் வழிகாண முன்வரும்படியும் நாம் அழைப்பு விடுகின்றோம்

கூட்டுத் தொழிற்சங்க கமிட்டி உருவாக்கிய 21 கோரிக்கைகளின் பின் ஒன்று திரண்டு அவற்றினை அடைவதற்கான உடனடிப் போராட்டத்திற்குத் தயாராகுமாறு நாம் தொழிலாளர்களை அறைகூவி அழைக்கின்றோம். மேலும் எமது ஐக்கியத்தைப் பலப்படுத்தி தனியொரு மத்தியஸ்தானத்தைத் தாமதமின்றிக் காண முன் செல்வோம்.

★ 21 கோரிக்கைகள் வெல்வோம்.

★ தனியொரு மத்தியஸ்தானம் காண்போம்.

★ தொழிலாள வர்க்கத்திற்குப் புரட்சிகரத் தலைமை அளிப்போம்.

## மே நாளே!

கடகட என ஒரு
விடமறு படையது
நட எனப் பணித்திடும் மே நாளே!
இடரறு செம்படை
திடமுடன் நடக்குது
கடலொலி கேட்குது போர் நாளே!
சடசட எனஎதிர்
குடலற ஓடுது
சுடரொளி பெருக்கிடும் செந்நாளே!

-சுபத்திரா

## தலையங்கம்

### ‘பிற்போக்கு மந்திரிகள்’?


‘அரசாங்கத்தின் பிற்போக்கு மந்திரிகளாகிய சி. பி. டி. சில்வாவையும், மைத்திரிபால சேனநாயகாவையும் நீக்குதல் வேண்டும்’ என்ற இடதுசாரி முன்னணித் தலைவர்களின் வேண்டுகோளைப் பற்றிய பேச்சு பலமாக அடிபடுகின்றது.

வெட்கமின்றி, மானமிழந்து மந்திரிப் பதவிக்காக மலையும் மடுவும் தாண்டி ஓடும் இடதுசாரித் தலைவர்களின் சந்தர்ப்பவாதப் போக்கை இந் நிபந்தனை எவ்வழியிலும் மறைத்து விடாது. என்றாலும் இவர்களை நாம் ஒன்று கேட்க விரும்புகின்றோம்.

இன்றைய அரசாங்கத்தில் இவர்கள் இருவரும் தானு பிற்போக்கு வாதிகள்? மற்றவர்கள் எல்லோரும் முற்போக்கு வாதிகளா? பெயர் சொல்லிக் குறிப்பிடுவதென்றுல், மந்திரிகள் மகாநாம சமரவீர, மைக்கேல் சிறீவர்த்தனு, பதியுதீன் முகமத், ஏ. பி. ஜெயசூரியா, இவர்கள் எல்லோரும் முற்போக்கு வாதிகளா?

முதலாளித்துவ அரசாங்கத்தில் உள்ள ஒருவர் முற்போக்குவாதிய இல்லையா என்பதை எங்ஙனம்தீர்மானிப்பது? இன்னெருவரின் விருப்பு வெறுப்பின்படியா? அல்லது பழையகோபதாபங்களின் அடிப்படையிலா அல்லது பல்வேறு புட்ட பிரச்சினைகளில் அவர் எடுக்கும் நிலைமையினைப் பொறுத்தா?

—12-ம் பக்கம் பார்க்க



## புரட்சிகரத் தலைமை தரும் மேதினமே வாழ்க!

தொழிலாளி

# லெனினுக்கு துரோகம் இழைக்கும் சோவியத்கட்சி

## கிரெம்ளின் குருமாரின் கச்சேரி

**கடந்த 23-ம் திகதி செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடந்த லெனின் தினச் சொற்பொழிவில், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் நா. சண்முகதாசன், நிகழ்த்திய உரையின் சுருக்கம்.**

''இன்று மாபுருஷர் லெனினைக் கற்பதும் புரிந்து கொள்வதும் எப்போதைக் காட்டிலும் அதிக முக்கியத்துவமடைந்துள்ளது.

லெனின் அவர்களாலேயே ஸ்தாபிக்கப்பட்ட உன்னத கட்சியான சோவியத் நாட்டுக் கம்யூனிஸ்ட்கட்சியேலெனினிஸ விரோத நவீன திரிபுவாதக் கொள்கைகளுக்குத் தாழ்த்தப்பட்டு, இவ்வாறாக வெகுஜனங்களின் புரட்சிகர நடவடிக்கையால் வென்றெடுக்கப்பட்ட கடந்தகால புரட்சிகர வெற்றிகளுக்கு ஆபத்து விளைவிக்கப்பட்டுள்ளமையே எமது காலத்தின் மிகப் பெரும் துயர்மிகு சம்பவமாகும். ஏங்கெல்ஸினால் நிறுவப்பட்ட, ஆனால் சீர்திருத்த வாதசோஷல்ஜனநாயக ஸ்தாபனமாகச் சீரழிந்த, இரண்டாவது சர்வதேசியத்திற்கு உற்ற விதியும் இதே தான்·

மாக்ஸினதும்-ஏங்கெல்ஸினதும் அடிப்படைப் புரட்சிகரப் போதனைகளை மீண்டும் வலியுறுத்தும் முயற்சியில் லெனின் தனது மிகக் கடுமையான அரசியல் போராட்டங்களிற் சிலவற்றை இந்த இரண்டாவது சர்வதேசியத்தின் தலைவர்களுக்கு, கோட்ஸ்கி, பெர்ன்ஸ்டீன் போன்றவர்களுக்கு, எதிராகத்தான் நடத்தவேண்டியிருந்தது. லெனின் தமது காலத்திய திரிபுவாதிகளுக்கு எதிராக நடத்தவேண்டியிருந்த அதே போராட்டத்தை, இப்போது நவீன திரிபுவாதிகளுக்கு எதிராக மீண்டும் நடத்த வேண்டியிருக்கிறது என்றளவில், சரித்திரம் மறுபடியும் நிகழ்கிறது, ஆனால் மிக மிக பரந்த ரீதியில் நிகழ்கிறது. நவீன திரிபுவாதத்தின் ஊற்றுவாய், மகோன்னத லெனின் அவர்களாலேயே ஸ்தாபிக்கப்பட்டதும், சரித்திரத்தின் முதலாவது வெற்றிகரமான தொழிலாளி வர்க்கப் புரட்சிக்குத் தலைமை தந்த கட்சிக்குரிய நன்மதிப்பு அத்தனையும் கொண்டதும், இன்று உலகின் தலையாய நாடுகளுள் ஒன்றில் அரசு அதிகாரத்தை வகிப்பதுமான ஒரு கட்சியில் உள்ளது என்பதால், இன்று மாக்ஸ்ஸிஸ்ட்—லெனினிஸ்டுகளின் போராட்டம் மேலும் கடினமாகியுள்ளது. இந்தச் சாதக அம்சங்கள்தான் குருஷ்சோவினாலும் அவரது சக திரிபுவாதிகளாலும் தங்கள் தீமையான தத்துவத்தை உலகெங்கும் பரப்பத் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளன. போராட்டம் கடினமானதாயிருக்கலாம், ஆனால் அது ஆரம்பித்து விட்டது, மாக்சிஸ-லெனினிஸம் இறுதியில் வெற்றியீட்டும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

சர்வதேச இயக்கத்திற் திரிபுவாதம் பரவியதும், குறிப்பாக சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது மகாநாட்டில்முதல் முறையாக விரித்துரைக்கப்பட்ட பாராளுமன்ற முறைகளால் சோஷலிஸத்திற்கான சமாதான மாறுதல் என்ற பிரமை பரவியதும், ஏற்கனவே பிரமாண்டமான தீமை விளைவித்தும், சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் போரிடும் துணிவையும் புரட்சிகர உணர்வையும் செயலறச் செய்துள்ளன. ஒரு காலம் புரட்சிகரமானவையாயிருந்த இடதுசாரிக் கட்சிகள் தம்மை வெறும் பாராளுமன்றக் கட்சிகளாக மாற்றிக்கொண்டு வர்க்கப் போராட்டத்திற்கும் புரட்சிக்கும் முதுகைத் திருப்புவதையும், மவுசிழந்து விட்ட, வெகுஜன - வெறுப்பைப் பெற்ற ஒரு முதலாளித்துவ அரசாங்கத்தை முண்டு கொடுத்துத் தாங்க விரும்புமளவுக்குச் சென்றதையும் கூட, நாம் உதாரணமாக இலங்கையிற் கண்டோம். முழுத் தொழிற்சங்க இயக்கத்தாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ள 21 கோரிக்கைகளைத் துரிதமாக அடைதற்காக முழுத் தொழிலாளி வர்க்கத்தையும் அணிதிரட்டி வழிநடத்துவதற்குப் பதிலாக, இடதுசாரிக் கட்சிகள் இப்போது முழு இயக்கத்திற்கும் முட்டுக்கட்டையாகச் செயல்படும் அளவுக்கு அவற்றுள் சீர்திருத்த வாதத்தினதும் திரிபுவாதத்தினதும் செல்லரிப்புப் பாரதூரமானதாக உள்ளது.

மார்க்ஸிஸ்ட் —லெனினிஸ்டுகளாகிய நாம் தொழிலாளி வர்க்கத்திற்கு இந்தத் துரோகத்தையும் காட்டிக்கொடுத்தலையும் அம்பலப் படுத்த முயலும் போதும், இந்தத் தவறான தத்துவங்களை நிராகரித்து உண்மையான மார்க்ஸிஸ-லெனினிஸக் கண்ணோட்டத்துடன் ஒட்டிநிற்கும்படி தொழிலாளர்களை அழைக்கும் போதும் சகலவிதமான தூற்றல்களும் எம்மீது பொழியப் படுகின்றன.

தனது கும்பலின் சமீபத்திய மாநாட்டில் திரு. கெனமன் இங்குள்ள கம்யூனிஸ்ட் கட்சியில் ஒரு பிளவைத் திட்டமிட்டு உருவாக்கியதாகச் சீன கம்யூனிஸ்ட் கட்சியைத் தாக்குமளவுக்குச் சென்றார். நாம் திரு. கெனமனிடம் சில கேள்விகள் கேட்க விரும்புகிறோம்.

கட்சிக்குள் இருந்த வித்தியாசங்கள் அமைப்பு விதிகளின் பிரகாரம் தீர்க்கப்படுவதைத் தடுக்குமுகமாகக் கட்சி அமைப்பு விதிகளை மீறும்படியும், இரண்டு வருடங்களுக்குட் கட்சி மாநாட்டைக் கூட்டாதிருக்கும்படியும் கெனமன் கோஷ்டியை இணக்கப் படுத்தியது சீனக் கட்சியா? உட் கட்சி ஐக்கியத்திற்கு ஏற்படக் கூடியது பாதிப்புக்களைக் கவனிக்காது செப்டம்பர், 26-ம் திகதிய அபகீர்த்தி பெற்ற தீர்மானங்களை அவசரமாக நிறைவேற்றும்படி கெனமன் கோஷ்டி மீது நிர்ப்பந்தம் கொணர்ந்தது சீனக் கட்சியா அல்லது வேறொரு நாட்டின் இங்குள்ள ஸ்தானிகராலயமா? இல்லை, திரு. கெனமன் அவர்களே, விஷயங்களைக் குழறுபடியாக்குவது சரிபோகாது. உண்மையான பிளவுகாரர்களைக் காண முகம் பார்க்கும் கண்ணாடிக்குள் பாருங்கள், சர்வதேச கம்யூனிஸ இயக்கத்தின் ஐக்கியத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைச் சட்டைசெய்யாது வெறுக்கத்தக்க தங்கள் சீன-விரோத கச்சேரியில் சாத்தியமான ஒவ்வொரு கம்யூனிஸ்ட் கட்சியையும் சேர்த்துக் கொள்ள விரும்பிய உங்கள் கிரெம்ளின் குருமாரைத் திரும்பிப் பாருங்கள். பல்லாண்டுக் காலமாகக் கம்யூனிஸ்டுகளின் வியர்வையாலும் உழைப்பாலும் கட்டி வளர்க்கப்பட்ட இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தைப் பிளப்பதில் தமது பங்கைத் திரு. கெனமன் இத்தனை விரைவில் மறந்துவிட்டாரா?

சீன கம்யூனிஸ்டுகள் உலகெங்குமுள்ள மாக்சிஸ-லெனினிஸ்டுகளை ஆதரிக்கத்தான் செய்கின்றனர். அது அவர்களின் சர்வதேசியத்துவ, தொழிலாளி வர்க்க கடமை. அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் அக்காலத்தில் சோஷல் ஜனநாயகக் கட்சிகளுக்குள் இடதுசாரிக் கோஷ்டிகள் தோன்றிய போது லெனினும் இதையேதான் செய்தார். இந்தக் கோஷ்டிகள்தான் பின்னர் லெனினின் வழிகாட்டுதலின் கீழ் கம்யூனிஸ்ட் கட்சிகளாக முகிழ்ந்தன.

இலங்கையில் சமீபத்திய அரசியல் சம்பவங்கள் எமது அரசியல் நிலையை மேல்மிச்சமாகவே நியாயப்படுத்தியுள்ளன. இடதுசாரி ஐக்கிய முன்னணியின் தவறான கருத்துக்களுக்கும் கெனமன் கோஷ்டியின் திரிபுவாதக் கொள்கைகளுக்கும் எமது கண்டனம், எதிர்பார்த்ததை விட மிக விரைவிலேயே நியாயப்படுத்தப்பட்டுவிட்டன.

லெனினின் பிறப்பின் இந்த ஆண்டுத் தினத்தில் நாம் தொழிலாளி வர்க்கத்திற்கு ஒரு உண்மையான, புரட்சிகரமான, மாக்ஸிஸ - லெனினிஸத் தலைமை வழங்கக் கூடியவர்களாயிருக்க வேண்டி மகோன்னத லெனினின் பிரேரணைகளைப் பரப்ப எம்மை மீண்டும் அர்ப்பணம் செய்து கொள்வோமாக!.

-(தொகுப்பு க.குமாரலிங்கம்)

# ஐயகோ! டாக்டர் என்.எம். பெரேராவே!

**சாட்டை**

கொஞ்ச நாட்களுக்கு முன் யூ. என். பி.யின் பெருந் தலைவர் ஒருவர் டாக்டர் என். எம். பெரேரா பற்றிப் பின்வருமாறு கூறினார்:

''25 ஆண்டு காலமாக நாம் அவரைக் கீழிறக்க முயற்சித்தோம் முடியவில்லை. ஆனால் வயது முதிர்ந்த இப் பெண்மணி ஸ்ரீமாவோ அவரைக் கீழே விழுத்துவதில் வெற்றி கண்டு விட்டார்.''

ஒருவர் எங்கு போனாலும் இவ் வவிப்பிராயம் தொனிக்கும் பேச்சுக் கேட்கின்றது. ஒரு காலம் புரட்சிவாதியாகவும், பெரும் மதிப்புக்குரியவராகவும் திகழ்ந்த டாக்டர் என்.எம்.பெரேரா தனது வயிற்றால் தவழ்ந்து அலரி மாளிகைக்குள் நுழைந்ததும், பிரதம மந்திரியைப் பின் தொடர்ந்து அனுரா பண்டாரநாயக்காவுடன் கிரிக்கெட் விளையாடச் சென்ற அவரின் அதல பாதாள வீழ்ச்சி பற்றிப் பேசாதார் யாருமே கிடையாது. பழைய காலத் துரைகளைப்போல ஏப்ரில் மாதக் கோடைக் காலத்தில் நுவரெலியாவின் குளிர் பிரதேசத்துக்குச் செல்லும் ''புரட்சிவாதி'' என். எம். பெரேராவின் குறைபாடும், கிரிக்கெட், போல்ரூம் நாட்டியம் ஆகியவற்றில் அவருக்கிருக்கும் ஆழ்ந்த ஈடுபாடும் அனைவரும் அறிந்ததே.

ஆனால் இவ்விதம் சிறுபிள்ளைத்தனமாக இருப்பதற்கும் ஒரு எல்லையுண்டு. ஒரு மந்திரிப் பதவி பெறுவதற்கு பிரதம மந்திரியிடம் வளைந்து நெளிந்து செல்வது ஒரு விஷயம். ஆனால் அரின் மகனுடன் கிரிக்கெட் விளையாடி அவரை 'வசியம்' செய்ய வேண்டிய அவசியமில்லை. டாக்டர் என். எம். பெரேராவின் இந்த மானங்கெட்ட நடத்தையைப் பார்க்கும் பொழுது கூட்டரசாங்கத்தில் சேரும் யோசனையை முதலில் வைத்த திரு. பிலிப் குணவர்த்தனவின் நடத்தை பரவாயில்லை.

நீண்ட காலமாகத் தமது அறிவுக்குப் பெயர் பெற்ற பிரமுகர்களின் சடுதியான மாற்றத்தை எங்ஙனம் விளக்க முடியும். அவர்களின் மூளைகள் சடுதியாக மந்தமடைந்ததின் விளைவா? அல்லது வயது போனதின் காரணமா? அல்லது இந்தச் சந்தர்ப்பவாதப் புழு இவர்கள் மத்தியில் எப்பொழுதும் இருந்து வந்துள்ளதா? சென்ற ஆகஸ்டில்தான் ஹர்த்தால் தினத்தில் மூன்று இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்களும் சீரழிந்த தொழிலாள வர்க்க விரோத ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு எதிராகப் போராடவும் அதன் இடத்தில் இடதுசாரி ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஏற்படுத்தவும் போரிட உறுதி பூண்டனர். ஆனால் இவ்வருடம் மே தினத்தின் பொழுது அதே ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் கூட்டுச்சேரவும், கடந்த வருட மே தினத்தில் இ. போ. ச. வேலை நிறுத்தத்தின் பொழுது கருங்காலிகளின் தலைவராக இருந்ததற்காக ஒரு தொழிலாளிக்குத் தங்கப் பதக்கம் வழங்கிய பிரதமரின் கீழ் வேலை செய்யவும் தயாராயிருப்பதாயும் பிரகடனம் செய்கின்றனர். இந்த முரண்பாடுகளை எங்ஙனம் விளக்குதல் முடியும்?

நிச்சயமாக இடதுசாரித் தலைவர்களிடையே மிகவும் செல்வாக்குமிக்கவரும், தொழிலாள வர்க்கம், மத்தியதர உயர் வர்க்கங்கள் ஆகிய அனைத்திலும் செல்வாக்கு மிக்கவருமான டாக்டர் என்.எம். பெரேராவின் தேசிய செல்வாக்கு தேய் பிறையாகத் தேய்வதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அவருடைய மத்தியக் கமிட்டியின் 14 அங்கத்தவர்களே அவர் முதலாளித்துவ ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு அடிபணிதலை எதிர்த்து பகிரங்கமாகவே வெளிவந்ததிலும் புதுமை ஒன்றுமில்லை.

சோஷல் ஜனநாயகவாதி டாக்டர் என். எம். பெரேராவின் முகமூடி கிழியும் காலம் அண்மி விட்டது. தொழிலாள வர்க்கத் தலைவராகவும், புரட்சி வாதியாகவும் அதே நேரத்தில் முதலாளித்துவ சமுதாயத்தின் முதல் தரப் பிரதிநிதியாவும் இரட்டை வேடதாரியாக அவர் நடத்திய வாழ்வுக்கு முடிவு நெருங்குகிறது. இது தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர உணர்வு வளர்ச்சியுறுவதைக் குறிக்கின்றது.

இந்திய குருசேவ் ஆதரவாளர்

# டாங்கே ஏகாதிபத்திய கைக்கூலி காட்டிக் கொடுத்த கடிதங்கள் இதோ!

இந்தியத் திரிபுவாதிகளின் தலைவரான டாங்கே எழுதிய கடிதங்கள் அவர்களின் உருவத்தை இந்தியத் தொழிலாளி வர்க்கத்திற்கும் பொதுமக்களுக்கும் தெளிவாக்கியுள்ளது. இக்கடிதங்களில் இரண்டை தொழிலாளி வாசகர்களின் கவனத்திற்காக இங்கு பிரசுரிக்கின்றோம்.

பிரிட்டிஷ் கவர்னருக்கு டாங்கேயின் கடிதம்

## ஸ்ரீபாத அம்ரித் டாங்கே

கைதி
(இ. பி. கோ. 121-ஏ பிரிவின் கீழ் கான்பூர் போல்ஷெவிக் சதிவழக்கில் 4 வருட கடுங்காவல் தண்டனை)

மேன்மைதங்கிய கவர்னர்—ஜெனரல் அவர்களுக்கு,

மேன்மை தங்கிய ஐயா,

கான்பூர் போல்ஷெவிக் சதி வழக்கு சம்பந்தப்பட்ட நாலு பேரில் நான் ஒருவன். பின்வரும் காரணங்களுக்காக என்னுடைய தண்டனைக் காலத்தை தள்ளுபடி செய்யவேண்டுமென்றதொரு வேண்டுகோளை மேன்மைதங்கிய தங்களுடைய பரிசிலனைக்குச் சமர்ப்பிக்க நான் விரும்புகின்றேன்.

என்னுடைய இந்த வேண்டுகோளை சமர்ப்பிக்கையில் குறிப்பிட்ட சில விபரங்களை நான் சுட்டிக்காட்டவேண்டியுள்ளது; அந்த விபரங்கள் ஒருக்கால் தங்களுக்குத் தெரிந்திராமலிருக்கலாம்; ஆனால் மத்திய உளவு இலாகாவின் டைரக்டரான கர்னல் சி. கேயி விற்கோ அல்லது இக் கடிதத்தில் இதன் பின் குறிப்பிட்டுள்ள நபர்களுக்கோ அந்த விபரங்களைத் தெரியப்படுத்துவதன் மூலம் அந்த விபரங்களின் உண்மையை மேன்மைதங்கிய தாங்கள் ஆதாரபூர்வமாக அறிந்து கொள்ள முடியும்.

கான்பூர் போல்ஷெவிக் சதி வழக்குகீழ்க் கோட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது சர்க்கார் தரப்பு வக்கீலான திரு. ராஸ் ஆல்ஸ்டிரான் என்னுடன் இடைப் பேச்சில் ஈடுபட்டார்; குற்றம் சாட்டப்பட்டிருந்த தனி நபர்களின் தண்டனை குறித்து அரசாங்கம் மிகவும் குறிப்பாக இருக்கவில்லை என்று அவர் அப் பேச்சின் போது குறிப்பிட்டார். இந்தியாவில் போல் ஷெவிக் சதித் திட்டம் இயங்கிக்கொண்டிருக்கிறது என்று அவ்வப்பொழுது அரசாங்கம் வெளியிட்டு வந்த அறிக்கைகளின் உண்மையை சந்தேகித்த பொது மக்களுக்கு உண்மையை நிரூபித்துக் காட்டுவதற்காக மட்டுமே அந்த சதி வழக்கு தொடங்கப்பட்டிருக்கிறது என்று சர்க்கார் தரப்பு வக்கீல் கூறினர். மேன்மைதங்கிய தங்களுடைய கொள்கையைசர்க்கார் தரப்பு வக்கீல் தவருகத் திரித்து, கூறியிருக்கமாட்டார்களென்று நான் நினைக்கிறேன்; ஏனெனில் அரசாங்க அதிகாரிகளுடன் சர்க்கார் தரப்பு வக்கீல் மிகவும் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார்; அதனுல் அரசாங்கத்தின் நோக்கங்களை அவர் தவருகப் புரிந்துகொள்வதற்கு இடமில்லை. நீதிமன்றத்தின் தீர்ப்பினுல் மேன்மை தங்கிய தங்களுடைய நிலை நிரூபிக்கப் பட்டுவிட்டதால், என்னுடைய தண்டனை காலத்தை தள்ளுபடிசெய்யுமாறு நான் பிரார்த்தித்துக் கேட்டுக் கொண்டுள்ளதை ஏற்றுக்கொள்வதற்கு மேன்மைதங்கியதங்களுக்கு ஆட்சேபனை இருக்காது.

நான் மற்றொரு நிகழ்ச்சி பற்றியும் குறிப்பிட முடியும். சரியாக ஒரு வருடத்திற்கு முன்பு, பம்பாய் நகரத்தின் உதவி பொலீஸ் கமிஷனரான திரு. ஸ்டிவாட் அவருடைய காரியாலயத்தில் என்னுடன் ஒரு சம்பாஷணை நடத்திக் கொண்டிருந்தார்; எம். என். ராயுடன் எனக்குள்ள உறவுகள் பற்றியும், வெளி நாடுகளிலிருந்து சில நபர்கள் என்னைச் சந்திப்பதற்காக வரவிருக்கின்றனர் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்ற விஷயம் பற்றியும் அந்த சம்பாஷணை நடந்துகொண்டிருந்றது. சம்பாஷணையின் போது மதிப்பிற்குரிய அந்த அதிகாரி, ஒரு சூசகமான குறிப்பை, பின்வரும் வார்த்தைகளில் குறிப்பிட்டார். குறிப்பின் முழு அர்த்தத்தையும் அந்த நேரத்தில் நான் புரிந்துகொள்ளத் தவறிவிட்டேன். திரு. ஸ்டிவாட் கூறியதாவது: ''இங்கேயும் வெளிநாடுகளிலும் உள்ள சிலவட்டாரங்களில் மிகப் பிரத்தியேகமான அளவிற்கு செல்வாக்குமிக்கதொரு அந்தஸ்தை நீங்கள் கொண்டிருக்கிறீர்கள். இந்த அந்தஸ்து அரசாங்கத்திற்கு ஏதாவது ஒரு வகையில் பயன் படுவதாக இருக்குமேயானுல் அரசாங்கம் மகிழ்ச்சியடையும்'' அந்த அந்தஸ்தை நான் இன்னும் கொண்டிருக்கிறேன் என்று நான் கருதுகின்றேன். ஒரு வேளை வழக்கின் காரணமாக அந்த அந்தஸ்து மேலும் உயர்த்தப் பட்டிருக்கிறது. மேன்மைதங்கிய தங்களுடைய அரசாங்கத்தின் நன்மைக்காவும், நாட்டின் நன்மைக்காகவும், எனக்குள்ள அந்த அந்தஸ்தை நான் பயன் பயன்படுத்த வேண்டுமென்று மேன்மைதங்கிய தாங்கள் மகிழ்வுடன் கருதினுல், நான் விடுதலை செய்யவேண்டுமென்று நான் பிரார்த்தித்துக் கேட்டுக் கொண்டுள்ள வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு மேன்மை தங்கிய தாங்கள் எனக்கு சந்தர்ப்பத்தை அளித்தால், அவ்வாறு செய்வதற்கு நான் மகிழ்வடைவேன்.

நான்கு வருட கடுங்காவல் தண்டனை எனக்கு அளிக்கப் பட்டிருக்கிறது; இந்தியாவில் மன்னர்பிரானின் ஆட்சி குறித்து என்டைய கண்ணேட்டத்தில் ஒரு சரியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக இந்த நான்கு வருட கடுங்காவல் தண்டனை எனக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. இந்த நான்கு வருட தண்டனை எனக்குத் தேவையில்லை என்று மேன்மை தங்கிய தங்களிடம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்; ஏனென்ருல் என்னுடைய எழுத்துகளிலோ அல்லது பிரசங்கங்களிலோ மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் சம்பந்தமாக திட்டவட்டமாக விசுவாசமற்ற நிலைமையை நான் ஒரு பொழுதும் மேற்கொண்டது கிடையாது; இனி வருங்காலத்திலும் அந்த நிலைமையை மேற்கொள்ளும் எண்ணம்எனக்குக் கிடையாது.

மரியாதைமிக்க இந்த உறுதி மொழி ஒப்பந்தம் மேன்மை தங்கிய தங்களுக்குத் திருப்தியை ஏற்படுத்துமென்றும் என்னுடைய பணிவான வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளும்படி தங்களை வற்புறுத்துமென்றும் நம்புகிறேன்; பதிலுக்காக ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறேன்.

இப்படிக்கு,
மேன்மைதங்கிய தங்களுடைய
மிகவும் கீழ்ப்படிவுள்ள
ஊழியன்,
ஸ்ரீபாத அம்ரித் டாங்கே

---

இந்திய திரிபுவாதி

### டாங்கேக்கு

ஏகாதிபத்திய வாதிகள்
நற்சாட்சிப் பத்திரம்

கான்பூர் சதி வழக்குக்கு முற் பட்ட காலத்தைய சில இரகசிய அறிக்கைகள்.
—27-7-1923

டாங்கேக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டுமா என்பதைப் பற்றிக் கலந்தலோசித்த பொழுது இந்திய உணவுப் பகுதியின் தலைவர் திரு. கயே இந்திய அரசாங்கத்துக்குப் பின்வரும் அம்சங்களைக் சுட்டிக்காட்டுகிருர்.

— ஒரு வழியில் அவரைப் பெரும் தலைவராக நான் கருதவில்லை.

— ராய்க்கு எழுதிய கடிதத்தில், அவரின் புரட்சிகர நடவடிக்கைகளைத் தொடர உதவியளிக்க உறுதியளித்ததுடன், நடவடிக்கைகளின் சட்ட முரணுன பகுதிகளை கண்டு வெட்கமுறுகிருர். அவர் பாவிக்கும் நல்ல அழகு வார்த்தைகள் உண்மையில் அவரின் பயங் கொள்ளித்தனத்தைமறைக்கும்முயற்சியே

— அண்மையில் அவர் பதறுகின்ருர்.

— எல்லா அறிக்கைகளின் படியும் அவர் ஒரு புழு, துப்பாக்கி, குண்டை அவருக்குஎதிராக எடுக்கத் தேவையில்லை. அவரை அதிகார பூர்வமாகக் கூப்பிட்டு 'நல்ல பேச்சுக்' கொடுத்தால் போதும், அதுவே அவரைப் பயமுறுத்திவிடும்.

---

## டாங்கே தாஜ்குப்தா கூட்டுக் கடிதம்

கான்பூர் ஜில்லா மாஜிஸ்டிரேட்டிற்கு,

ஐயா,

நாங்கள் இப்பொழுது எந்தக் குற்றத்திற்காக தண்டனை அடைந்திருக்கிருேமோ அந்தக் குற்றத்தை இனி ஒருபொழுதும் செய்யமாட்டோமென்று அரசாங்கத்திற்கு ஒரு உறுதிமொழி ஒப்பந்தத்தைக் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிருேமென்பதை இம் மனுவில் கையெழுத்திட்டுள்ள நாங்கள் உங்களுக்குத் தெரிவிக்க விழைகின்ருேம்; சாதகமான வகையில் எங்களுடைய வேண்டுகோளை பரிசீலனை செய்து கூடுமான அளவு துரிதமாக எங்களை விடுதலை செய்வதற்கு அரசாங்கம் மூடிவுசெய்தால் நாங்கள் அரசாங்கத்திற்கு வந்தனம் செலுத்துவோம்; ஏனெனில் நாங்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் கஷ்டத்தை எங்களால் தாக்குப்பிடிக்க முடியாது. எங்களுடைய பெட்டிஷன் (மனு) ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு அரசாங்கத்துடன் தாங்கள் ஏற்பாடு செய்வீர்களேயானுல் நாங்கள் உங்களுக்கு எங்களுடைய சொந்த வந்தனத்தை தெரிவித்துக் கொள்பவர்களாக இருப்போம்.

ஜில்லா ஜெயில்,
கான்பூர்
ஜூலை 7-1924

உங்களுடைய கீழ்ப்படிதலுள்ள
ஊழியர்களான,
ஸ்ரீபாத அம்ரித் டாங்கே,
நளினி பூஷன்தாஸ் குப்தா.

நிர். 1707 தேதி 8-7-24

இந்த மனு உத்தரவுக்காக கான்பூர் ஜில்லா மாஜிஸ்டிரேட்டிற்கு அனுப்பப்பட்டது. கைதிகள் 7-7-24-ம் தேதியன்று சீதாபூருக்கும், கோரக்பூருக்கும் மாற்றப்பட்டனர்.

டபிள்யூ. எஸ். வில்லிமோர்,
லெப்டினெட் கர்னல், ஐ. எம். எஸ்.
ஜெயில் சூப்ரின்டென்ட்.
கான்பூர்.

மனுவின் இந்த மூலப் பிரதியை விளக்க குறிப்புகள் கொண்ட ஒரு உறையுடன் சேர்த்து கமிஷனருக்கு அனுப்பப்பட்டது. பைலுக்காக நகல் வைத்துக்கொண்டிருக்கிறேன்.

ஜே. ஸ்ரேரார்.
8-7-24

கோரக்பூர் ஜில்லா மாஜிஸ்ரேட்டிற்கு,

ஐயா,

கான்பூர் செஷன்ஸ் நீதிபதியின் கோர்ட்டில் இ. பி. கோ. 121-ஏ பிரிவுப்படி 1924 மே மாதம் 20-ம் தேதியன்று எனக்கு நாலு வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்பதை மிகவும் பணிவுடனும் மரியாதையுடனும் தெரிவித்துக்கொள்ள விழைன்கிறேன்.

நான் செய்த காரியங்களுக்காக நான் மிகவும் வருந்துகிறேன். என்னுடைய விடுதலைக்காக உங்களால் சாத்தியமானதனைத்தையும் அன்புடன் செய்யும்படி நான் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். வருங்காலத்தில் எத்தகைய அரசியல் இயக்கத்திலும் நான் ஒருபொழுதும் பங்கெடுத்துக் கொள்ள மாட்டேன் என்று நான் உறுதி கூறுகிறேன். அத்துடன் தாங்கள் விரும்பக்கூடிய எவ்வித உறுதிமொழியையும் கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

மரியாதையுடன்,
நளினி பூஷன்தாஸ் குப்தா
கைதி.
கோரக்பூர் ஜில்லா ஜெயில்
16-7-24

தொழிலாளி

# புரட்சிகர மே தினம்

**எம். பி. செல்லையா**

[பதுளை மாவட்டப் பிரதிநிதி, இலங்கைத் தோட்டத் தொழிலாளர்(செங்கொடிச்) சங்கம்.]

"மே தினம்'' சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க உணர்வையும் - புரட்சிகர குணும்சத்தையும் மேலும்-மேலும் செழுமைப்படுத்தப் போராடும் தினமாக இவ்வருடம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

சர்வதேசரீதியில் நவீன திரிபுவாதிகள் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைக் கைவிட்டு, வர்க்க சமரசத்தில் ஈடுபட்டு, தொழிற்சங்க இயக்கங்களை சீர்குலைத்து, ஏகாதிபத்தியங்களை அழகுபடுத்த முதலாளித்துவ ஜனநாயகத்தில் ஆழ்ந்து, போலிப் பாராளுமன்ற மோகத்தில் பாட்டாளி வர்க்கத்தை வீழ்த்த சகல தகிடுதத்தங்களையும் செய்கிறார்கள்.

நமது நாட்டிலுள்ள நவீன திரிபுவாதிகள் ஒருபடி மேலே சென்று 1963, ஜனவரி-பெப்ரவரி மாதங்களில் நடந்த இலங்கைபோக்குவரத்துத் தொழிலாளர்களின் பொது வேலை நிறுத்தத்தை பகிரங்கமாகக் காட்டிக்கொடுத்து, கருங்காலித்தனம் செய்து, துரோகம் விளைவித்தார்கள். அத்தோடு நில்லாது, சக்திமிக்க தொழிற் சங்க கேந்திரமான இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தையும் (சி.டி.யூ.எப்.)பை சீர்குலைக்க பிரம்மப்பிரயத்தனம் செய்து, வர்க்க உணர்வுமிக்க தொழிலாளர்களால் தொழிற் சங்க அணியிலிருந்து விரட்டியடிக்கப்பட்டார்கள்.

என்றாலும், அவர்கள் புரட்சிகர சக்திகளை பிளவுபடுத்தும் தங்கள் கைங்கரியத்தை போட்டித் தொழிற்சங்கங்கள் அமைத்து நடைமுறையில் செயல்படுத்துகிறார்கள். சகல போராட்டங்களும் பாராளுமன்ற ஆசனத்தை நோக்கி என்ற தமது உயிர் கோஷத்தை மூடுதிரையாகப் பாவித்து, கொள்கை அடிப்படையில் அமையாத இடதுசாரி ஐக்கிய முன்னணியை முன் நிறுத்தி வெகுஜனங்களையும் - தொழிலாளர் வர்க்கத்தையும் வேறு திசையில் (தேர்தல்) திருப்பிவிட பெரும் முயற்சி செய்கிறார்கள். இதைப் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்வது சகல புரட்சிகர சக்திகளினதும் கடமையாகும்.

ஸ்ரீ லங்கா அரசாங்கம் உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவினங்களை கட்டுப்படுத்த முடியாமலும், பொருளாதார வீக்கத்திலிருந்து மீள முடியாமலும், வளர்ந்துவரும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு முகங்கொடுக்க முடியாமலும் நடுக்குற்று, தன்னைப் பாதுகாக்க மீண்டும் பிளவு வேலைகளையும் — இனவெறிப் பிரச்சாரத்தையும் செய்து தொழிற்சங்க ஐக்கியத்தை முறியடிக்க முன்நிற்கிறது. அத்தோடு 'கூட்டு அரசாங்கம்' என்ற சுலோகத்தை முன்தள்ளி இடதுசாரிகளிடையே உள்ள வலதுசாரிகளைப் பிடிக்க வலையை விரித்துள்ளது. மேலும், ஒரு இந்தியக் குடும்பத்திற்கு (குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களுக்கு) ஆயிரம் ரூபாய்கள் தருகிறோம். செல்லுங்கள் இந்தியாவிற்கு என்று நப்பாசை காட்டுகிறது.

இந்நாட்டைத் தாயகமாகக் கொண்டு வாழும் தோட்டத் தொழிலாளர்களை அந்நிய, இந்தியப் பிரஜைகள் என்று சுட்டிக் காட்டுவதின் மூலம் சகல பிரச்சினைகளிலிருந்தும் ஓரளவு மீளலாம் என எண்ணுகிறது. ஆனால், காலம் கடந்துவிட்டது என்பதை ''சோஷலிஸத்திற்கான மத்தியபாதை'' பேசும் சுதந்திரக் கட்சியின் அரசாங்கம் இன்னமும் உணராதிருப்பது புதுமையாயுள்ளது.

தொழிலாளர் வர்க்கத்தை இன ரீதியில் வேறுபடுத்தும் ஏமாற்று ஜாலவித்தைகள் இந்நாட்டு வர்க்க உணர்வு மிக்க புரட்சிகரத் தலைமையில் ஸ்தாபன ரீதியில் திரண்டுள்ள தொழிலாளர் மத்தியில் என்றும் எடுபட்டதில்லை; இனிமேலும் எடுபடப் போவதில்லை.

ஆனால், போராட்டத்தில் புடம்போட்டு எடுக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர் வர்க்கம் ''நவீன திரிபுவாத எத்தர்களின்'' மயக்கு மொழிகளில் மசியவில்லை. மாறாக போராட்டக் கச்சைகட்டிவிட்டார்கள். இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் தனது புரட்சிகர பாரம்பரியத்திற்கொப்ப நாட்டிலுள்ள சகல தொழிற் சங்க மத்தியஸ்தாபனங்களையும் ஒன்று படுத்தி தொழிற் சங்க ஐக்கியத்திற்கு வழிகாணும் 21 கோரிக்கைகளை சமர்ப்பிக்க வழிவகுத்தது. இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் புரட்சிகரத் தலைமை உழைப்பாளர் வர்க்கத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளது.

இதுநாள்வரை மற்றுமுள்ள தொழிற் சங்கங்களோடு இணையாது தனித்து இன ரீதியில் பிளவுபட்டிருந்த தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் என்றுமில்லாதவாறு ஐக்கியம் என்ற உணர்வு மேலோங்கியுள்ளது. 21 கோரிக்கைகளை ஏற்று தங்களின் தொழிற் சங்கங்கள் மற்றும் தொழிற் சங்கங்களோடு ஏற்பட்டுள்ள ஐக்கியம் பாதுகாக்கப்பட மேலும் வளர வேண்டும் என்ற ஒருமுகப்படும் நோக்கு, உற்சாகத்தோடு சகலபகுதி தொழிலாளர்களாலும் வரவேற்கப்படுகிறது.

கடந்த காலங்களில் பிற்போக்குத் தலைவர்கள் தோட்டத் தொழிலாளர்களை இன ரீதியில் பிளவுபடுத்தி, தாம் இந்தியர் என்ற நச்சுக் கருத்தை சதா வளர்த்து சிங்களத் தொழிலாளர்களுக்கும் - தோட்டத் தொழிலாளர்களுக்குமிடையில் பெரும் வெடிப்பை உண்டுபண்ணினார்கள். இத்தகைய அழிவுப் போக்கை எதிர்த்து வளர்ந்துவரும் முற்போக்கு சக்திகள் நீண்ட நெடுங்காலமாகப் போராடியே வருகிறார்கள். குறிப்பாக இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் தொழிலாளர்களை இன ரீதியில் பாகுபடுத்துவதை எதிர்த்து வீராவேசமாகப் போராடும் புகழ் படைத்தது. 21 கோரிக்கைகளை முன்வைத்த போராட்டத்தில் இனப் பிளவு ஒதுக்கப்பட்டு, ஐக்கியத்திற்கான ஒளி பளிச்சிடுகிறது.

21 கோரிக்கையின் ஊடே தொழிற் சங்க ஐக்கியத்திற்கு பொது உணர்வு மேலெழும் அதேவேளை' நவீன திரிபுவாதிகளின் முகமூடியும் கிழிகிறது. திரிபுவாதிகள் அரசாங்கத்தோடு கூட்டுசேர, ஒத்துழைப்புப்பற்றி பகிரங்கமாகவும்-திறை மறைவாகவும் பேச்சு வார்த்தைகள் நடத்தி நடக்கவிருக்கும் போராட்டங்களை முறியடிக்க மாஜி கருங்காலிகளையெல்லாம் பின் தள்ளிவிட்டு, தாங்கள் முன்னணி வீரர்கள் என்பதை நாள்தோறும் பத்திரிகைகளில் விடுக்கும் அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்துகிறார்கள். 21 கோரிக்கைகள் அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பதை காலம் லாழ்த்த வேண்டும் என வெட்கமின்றி சொல்லுகிறார்கள்.

ஆக இவ்வருட மேதினம், பாராளுமன்ற ஆசன திரிபுவாத வெறியர்களுக்கும், தொழிலாளர் வர்க்கத்தைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளுக்கும், நொருங்கி விழவிருக்கும் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும், அதற்கு திட்டுக் கொடுப்போருக்கும் பலமான மரண அடி கொடுக்கும் புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தின் ''மேதின''மாகப் பிரகாசிக்கிறது.

★★★★★★★★★★★
வாசியுங்கள்
யுவசக்தி
மேதின - காலனி
எதிர்ப்பு சிறப்பு இதழ்
★★★★★★★★★★★

## வட்டுக்கோட்டையில் வாலிபர் சங்கம்

மார்ச் 29-ந் திகதி திங்கட்கிழமை மாலை 7 மணியளவில் வட்டு-கிழக்கு — சித்தன்கேணி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கப் பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் தோழர் அ.லோகநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அத்தருணம் 12 அங்கத்தவர்கள் சமூகமளித்திருந்தனர்.

கூட்டத்தில், திரிபுவாதத்தையா அல்லது புரட்சிகர உண்மை மார்க்ஸிஸ — லெனினிஸத்தையா ஏற்பது என்ற விவாதம் நடைபெற்றது. ஈற்றில் திரிபுவாதம் நிராகரிக்கப்பட்டு, வாலிபர் சம்மேளனத்தின் மாஜித் தலைவர் திரு. சரத் முத்தெட்டுவகம மீது மத்திய கமிட்டி எடுத்த நடவடிக்கையை அங்கீகரிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. காரியதரிசி திரு. கு. சிவஞானம் திரிபுவாதக் கருத்தை ஆதரித்தமையால் அவரை அங்கத்தவர்கள் ஏகமனதாகச் சங்கத்திலிருந்து வெளியேற்றினர்.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: தோழர் இரா. சதாசிவன், உப-தலைவர் தோழர் வெ. பாலசுந்தரம், காரியதரிசி தோழர் ப. சண்முகநாதன், உப-காரியதரிசி தோழர் அ. இரகுநாதன், பொருளாளர் தோழர் அ. லோகநாதன். கமிட்டி உறுப்பினர் தோழர்கள் சி. விஞசித்தம்பி, செ. தம்பிமுத்து, பொ. நல்லையா.

கட்சியினதும், வாலிபர் சம்மேளத்தினதும் பத்திரிகை விற்பனையை அதிகரிப்பது என்றும், அரசியல் வகுப்பு கிரமமாக நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## தொழிற்சாலையில் கட்சிக் கிளை

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் காங்கேசன்சீமேந்து தொழிற்சாலைக்கிளை இருவாரங்களுக்குமுன் நிறுவப்பட்டது. 10 தொழிலாளர்கள் கிளையில் சேர்ந்திருக்கிறார்கள். இன்னும் சிலர்சேரவிருக்கிறார்கள். தோழர்கள் கே. நடராசாதலைவராகவும், எஸ். இராஜதுரை செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டார்கள். கட்சியின் கடந்த காலத் திரிபுவாதத் தலைமைதொழிற்சாலைகளில் கட்சிக்கிளைகள் நிறுவாது விட்ட தவறை தற்பொழுதுள்ள புதிய புரட்சிகரத்தலைமை நிவர்த்தி செய்கிறது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்து காட்டாகும்.

## தொழிற்சங்கவிரோதிகளுக்குத் தகுந்த பாடம்

"தலவாக்கொல்லைப் பகுதியைச் சேர்ந்த மடக்கொரை குறிப்பிலுள்ள வடக்கிமலை தோட்டத் தொழிலாளி பி. கே. சங்கன் மடக்கொமரை பெக்டரியில் வேலை செய்து வந்தார். இந்த பெக்டரியைச் சேர்ந்த 2-வது டீமேக்கரின் தூண்டுதல் காரணமாவும் அவருக்கு உடந்தையாக விருந்த சுப்பவைசர் தனராஜ் என்பவராலும் சங்கனுக்கு வேண்டுமென்றே ஒரு நாள் பெயர் மறுக்கப்பட்டது.

இந்த டீமேக்கரும், சுப்பவைசரும் பல வருடங்களாக இந்த தோட்டத்திலுள்ள செங்கொடிச் சங்கத்திற்குஎதிராகவேலை செய்துவந்தனர். சங்கன்முன்னணித் தொழிலாளிகளில் ஒருவர் என்ற காரணத்தினால் அவரை அடக்கவேண்மென்ற தீய நோக்கத்துடன் தான் அவருக்கு பெயர் கொடுக்க மறுத்தனர்.

ஆனால் செங்கொடிச் சங்கம் இதையிட்டு எடுத்த நடவடிக்கையின் காரணமாக இவ்வருடம் ஜனவரி மாதம் சங்கனுக்கு மறுக்கப்பட்ட ஒரு நாட் சம்மளம் இம்மாதம் (ஏப்ரல்) கொடுக்கப்பட்டதோடு தேட்டத் துரை நடத்திய விசாரணையில் பிரஸ்தாப சுப்பவைசரும், டீமேக்கரும் குற்றவாளிதான் என்று காணப்படவே அவர்களிருவருக்கும் எச்சரிக்கை நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. செங்கொடிச் சங்கத்தை அழிக்க முனைந்த இவ்விருவருக்கும் தகுந்த பாடம் படித்துக்கொடுக்கப்பட்டு விடடது.

மேற்கூறப்பட்ட இந்த நிகழ்ச்சி மடக்கொமரை குறிப்பிலுள்ள ஏனைய தொழிலாளர்களை தங்கள் கோரிக்கைகளுக்காக உற்சாகத்துடன் போராடத் தூண்டியுள்ளது.

(ந.நி)

## புத்தூரில் வாலிபர் சங்கம்

சென்ற வாரம் புத்தூரில் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் நிறுவப்பட்டது. தோழர் கா. சூடாமணி அவ்வைபவத்தில் கலந்து கொண்டார். புதிதாக நிறுவப்பட்ட புத்தூர் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம், அவ்வூர் மக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் மின்சாரம் போன்ற பிரச்சனைக்கு பெரும் இயக்கம் நடத்த முடிவு செய்தது. கூடிய சீக்கிரத்தில் இவ்வியக்கம் ஆரம்பிக்கப்படும்!.

## உலகத் தொழிலாளருடன் எமது பிரதிநிதிகள்

இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுக் கவுன்சில் அங்கத்தவர்களான தோழர்கள் ஏ. சீபர்ட் சில்வா, ஏ. இ. ஜேமிஸ் ஆகியோர் செஞ்சீனத் தொழிலாள, உழைப்பாள மக்களுடன் மே தினத்தைக்கொண்டாட ச்சீனவிற்குப் பயணமாகியுள்ளனர்.

தோழர் ஏ. சீபர்ட் சில்வா பெலியகொடை இ. போ. ச, டிப்போ டிரைவர் தொழிலாளரும் இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் உதவிக் காரியதரிசியுமாவர்.

தோழர் ஏ. இ.ஜேமிஸ்.சி. டபிள்யூ.ஈ.எலக்ட்ரிசனும்ஐக்கிய இஞ்ஜினியரிங் தொழிலாளர்சங்கப் பொருளாருமாவர்.

இ. தொ. ச.ச. உப—தலைவர் தோழர் ஆரியவன்ச குணசேகரா மே தினத்தைக்கொண்டாடக் கியூபா நாடு செல்கிறார்.

# பாராள் உரிமை பாட்டாளிக்கே!

எழடா தோழா! என்றோர் கர்ஜனை
எங்கோ இருந்து கேட்டதும் திடுக்குற்று
எழுந்தேன் நடந்தேன் தேடினேன், இல்லை.
எடுத்தேன் பேனு தொடுத்தேன் உணர்வை
கொடுத்தாள் சக்தி கொஞ்சும் தமிழில்
படைத்தேன் தோழரீர் பாரிலெம் வர்க்கம்
உடைத்தெறியட்டும் ஊழிச் சிறையை
விடுதலை நந்நாள் விரைவாய் மலர்க.

புரட்சிக் கொடியை உயர்த்திப் பிடித்தே
புதியதோர் கோஷம் எழுப்பிட வருக
வெருட்டும் உருட்டும் வேரறும் திரிபும்
அறுக்கும் அரிவாள் நொறுக்கும் சுத்தியல்
பறக்கும் திருட்டும் பதுக்கலும் பிதற்றலும்
நிறக்கும் உலகெலாம் நீடு வாழ் செங்கொடி
சிறக்கும் தோழர்தம் சீர்பெறும் ஆட்சி
இறக்குமுன் புரட்சிக் களத்தினில் வருக!

கொடும்பணக்காரர் கொட்டம் அடக்கக்
கொள்கைப் பாதையில் இருவழியில்லை
அரும்பெருவழியே அவனியிற் புரட்சி
விரும்பாதோர்க்கு வேப்பங்காயது
சோம்பேறிக்கது சடுகுடு ஆட்டம்
திரிபுகள் தமக்கே தீயதோர் பாதை
பாட்டாளிக்கோ பலனுறும் ஒன்று
கூட்டாயெழுந்தால் புரியுமே இன்று.

பெற்றதாய் குலமும் பெண்டிரும் மக்களும்
உற்ற தோழர்களும் உணர்ந்தோர் பலரும்
சற்று முன்னிருக்கும் சடுதிப் புரட்சியில்
பற்றுப்பிடித்தே பார்த்திருப்பதுபோல்
மக்கள் தம் எழுச்சி விளக்குது தோழா
புதியதோர் சகாப்த உதயமெப்போவெனத்
திக்கெலாம் பேச்சு 'திண்ணை'க்கதையிது
இக்கணமேனும் எழுந்தால் வெற்றியே.

வீராவேசம் எழுந்தது தோழா
போரார்வத்தை அடைத்தேன் கேளாய்
பாராள் உரிமை பாட்டாளிக்கே
பாய்ந்தெழடா எனக் கூவியழைத்தேன்
அரங்கிலிறங்கடா அடிமுடிதொடடா
வெள்ளிடைமலை போல் விளக்குது வெற்றி
ஒருமுறை திரள்க! உலக முன் கையில்.

உதைத்தே வதைத்துச் சிதைத்துப்புதைக்கவே
உருக்கொண்டெழடா உலகத் தோழா
பதைத்துப் பதைத்தே பூர்ஷுவாக் கூட்டம்
பாரினிலிருந்தே விடுதலை பெறுமே
செந்தழல்க்கண்ணெடு சீறி எழுந்தே
செங்கொடிக்கீழொரு சபத மெடுப்பாய்
எந்தநாள் போர் நாள் அது உன் நாளென
எங்குமுன் நெஞ்சை நிமிர்த்திக் கூறு.

**-தா. சி. வில்வராஜ்**

இலங்கைத் தொழிலாள வர்க்கத்திடையே குமுறி எழும் புரட்சிகர உணர்வு புதிய எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் நாட்டுக்கு நல்கி நல்லரும் இலக்கியம் எழுவதற்கும் வழி வகுக்கின்றது. இந்த இலக்கிய எழுச்சியின் விளைவாகவும் பிரதிபலிப்பாகவும் தொழிலாளிக்கு வந்த நூற்றுக்கணக்கான கவிதைகளில் சிலவற்றை இப் பக்கத்தில் பிரசுரிக்கின்றோம்.

★★★★★★★★★

# மாக்சிஸமே மறமலரே!

மாக்ஸ் கண்ட தத்துவத்தை
மேடையேற்றி
ஆக்கமெனும் அணிகலனல்
அழகுசெய்து
வாக்கொளியால் திரிபுக்கு
வெடிகள் வைத்து
போக்கற்ற ஏழைகளைப்
பேணிக் காத்து
தூக்கத்தில் இருந்தவற்குத்
துணிவு ஊட்டி
தாக்கவந்த எதிரிகளைத்
தரையில் வீழ்த்தி
பூக்கட்டும் புதுப்புரட்சி
புதுமை நோக்கி
ஆக்கட்டும் புது உலகம்
என்று சொன்ன
தீக்கதிரே செங்கொடியே
லெனினே தூய
மாக்ஸிஸமே மறமலரே
அறிவே உம்மைப்
பாக்கொண்டு போற்றுதற்குப்
பாரில் இன்று
மா வோ வின் கவிக்குத்தான்
சக்தியுண்டு.

**-சுபத்திரா.**

★★★★★★★★★

# சரியும் ஆட்சிக்கே சகபாடியா?

திரிபு வாதச் சேற்றினில் மூழ்கிடும்
துரியர் தம்மைத் தூற்றினும் தீருமோ
விரிவி லாத ஞானம் பெற்றவர்,
விரைவ தும்வெறுஞ் சூனியம் நோக்கியே.

நரைதிரையொடு மூப்பும் மெய்திடில்,
நற்ற ஞானமும் நழுவிப் போகுமோ
அரைகு றைஅறி வானதும் ஏனதோ
அரிய ஞாலம் அகலும் நினைவதோ.

வித்தை ஆயிரம் வேண்டிநின் றோரெலாம்
விதந்து பாரினை வெற்றி காண்பரே
சொத்துப் போதும் சுதந்திரம் போதுமென்
றெுத்துக் கொள்வீரோ ஒண்டி மடையரே.

புரட்சி யென்றதும் குலைநடுக் குற்றதோ
மருட்சி கொண்டு மறத்தை மறந்திரோ
வரட்சி கொண்ட உள்ளத் திலேயொரு
திரட்சி அற்ற உருவம் கண்டதால்.

விண்ணைச் சாடும் வீரர் இருக்கையில்
மண்ணைச் சாடவும் மயக்கம் அடைந்திரோ
பண்ணை நாடில் பார்த்துத் தருவரால்
கண்ணை மூடியும் முன்னே செல்வரோ.

நூற்றி லேயொரு பேறு கிடைப்பினும்
ஆற்றி லேயொரு கட்டை கிடைப்பினும்
போற்று நமதரு சுற்றமும் சூழலும்
சேற்றிலே விட்டுச் சென்று கடப்பிரோ.

அந்திக் காலம் வந்த ததற்குளே
சிந்திச் சிதறிய பேறுகள் கொண்டு நீ,
மந்திரி தந்திரி ஆகிச் சிலநாள்
இந்த உலகினை நீங்க நினைத்திரோ.

சரியும் ஆட்சிக் கேசக பாடியாய்
உரிய காலத் துறுதுணை ஆகியே;
பெரிய தான பதவி பெறுவதும்
அரிய சாதனை ஆகும் நினைப்பதோ.

பேரம் பேசிப் பேரலை ஏற்றிட
ஆர வாரம் ஆனஇந் நாளிலே
நேர்க டன்பல நெட்டி முறித்தனை
'சேர-வாரும் செகத்தீர்' கருத்திதோ.

உற்றுமுற் றுமுணர்ந் தபினும் மைநாம்
சற்றும் சஞ்சலம் இன்றக் கழுவினில்
முற்றும் முடிவுற ஏற்றிப் 'பரணி'யைப்
பற்றிப் பாடி மகிழ்ந்து களிப்பமோ.

அற்றை ஞான்று ஆய்ந்த அறிவினைப்
பெற்ற னீரெனப் பெரிதும் உவந்ததும்,
இற்றை ஞான்று இழிந்த கருத்தினை
வெற்று வாயினல் உமிழ்ந்து நிற்பிரோ.

மாக்ஸுும் ஏங்கல்ஸுும் லெனினும் ஸ்டாலினும்
ஆக்கம் தந்ததும் அகிலம் அறிந்ததை
தாக்க முந்துறும் தற்குறி யாளரே
போக்கை மாற்றிப் புதுநடை போடுவீர்.

**-யயழ்ப்பாணக் கவிராயர்**

★ தரமான தாள்கள்
★ அச்சுக்கு நேர்த்தியானவை
★ பத்திரிகைகள், புத்தகங்கள், பிரசுரங்கள் அச்சடிக்க சிறந்த தாள்கள்

உடனடியாக விண்ணப்பியுங்கள்:

இலங்கை டிரேட் எக்ஸ்சேஞ்

மேர்க்கண்டைல் ஹவுஸ், 56/6, ராணி வீதி, கோட்டை.

தொழிலாள

# தொழிலாளர் வர்க்கத்துக்

## கொள்கையற்ற கூட

## ஆட்டம் காணும் அ

**ஸ்ரீலங்கா அரசாங்கம் சாதாரண பாராளுமன்ற முறையில் ஆட்சி நடாத்த முடியாததாலும், நான்கு மாதங்களுக்கு மேலாக அது பாராளுமன்றத்தை கூட்டாது ஒத்திபோட வேண்டி வந்த அவசியத்தாலும் வெளிவந்த அரசியல் நெருக்கடி இன்னும் தொடர்கின்றது.**

**பாராளுமன்றம் இல்லாமலே இலங்கையில் ஆட்சி நடைபெறுகின்றது. ஒரு கூட்டு அரசாங்கம் அமைக்கப் பலவித முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. இந்நெருக்கடி உண்மையில் இலங்கையில் பாராளுமன்ற ஜனநாயகத்தின் நெருக்கடியேயாகும்.**

முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகம், பலகுறைபாடுகள் இருந்த பொழுதும், இரு கட்சி முறை உள்ள நாடுகளில் நன்கு செயல்பட்டுள்ளது. இது வழக்கமாக விருத்தியடைந்த கைத்தொழில் நாடுகளிலேயே முடிந்துள்ளது. இங்கிலாந்து இதற்கோர் சிறந்த உதாரணமாகும்.

இன்று இலங்கையில் மூன்று குறிப்பிடத்தக்க அரசியல் கோஷ்டிகள் உள- ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இடதுசாரி ஐக்கிய முன்னணி. சிறுபான்மையினர் மத்தியிலே செல்வாக்குள்ள தமிழரசுக் கட்சி இலங்கை அரசியலில் முக்கிய பங்கு வகிக்கமுடியாதிருக்கின்றது. ஆனுல் இக்கோஷ்டிகளுள் ஒன்றும் பாராளுமன்றத்தில் தனியனகப் பெரும்பான்மை பெற்று தாங்களாகவே ஆட்சியமைக்கும் நிலையிலில்லை. 60 மார்ச் தேர்தல்கள் இதனை தீர்க்கமாக நிரூபித்தது. பாராளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலுக்குப் போவதே இன்றைய நெருக்கடியில் ஒரே வழியென சிலர் ஆலோசனை முன்வைத்தல் கூடும்; உண்மையில் அங்ஙனம் முன்வைத்துள்ளனர். ஆனுல் இன்னுமொரு பொதுத் தேர்தல் பிரச்சினையைத் தீர்க்காது. நெருக்கடியைக் கிட்டத்தட்ட ஒரே உருவத்தில் அது திரும்பவும் உற்பத்தியாக்கும். இந்நிலைமைதான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இடது பக்கம் நோக்கி இயங்கும் சக்திகள் என்று கூறப்படுபவைக்கும், இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கும் இடையே நடைபெறும் "கூட்டரசாங்க" பேச்சுவார்த்தைகளை விளக்குகின்றது.

இப்பேச்சுவார்த்தைகள் பயன்தருபவையாக அமைந்தால், அத்தகைய கூட்டரசாங்கம் தொழிலாள வர்க்கத்துக்கு நன்மையானதாகுமா? நிச்சயமாக இல்லை. ஆக மிஞ்சினுல் ஐக்கியதேசியக்கட்சியை அரசாங்கத்துக்கு வராமல் அது தடுக்கக் கூடும். தொழிலாள வர்க்கத்தின்நலனைக் கருதுவதானுல், இந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கெதிரான வெற்றி குறித்து எல்லாக் காலமும் பேச முடியாது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கும் இடையில் உள்ள எந்த ஒப்பந்தமும் அடிப்படையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு இசைவானதாகவே அமையும். இடதுசாரி ஐக்கிய முன்னணித் திட்ட அடிப்படையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-இடதுசாரி ஐக்கிய முன்னணிக் கூட்டு அமையவேண்டும் எனக் கோருபவர்கள் எட்டமுடியாத வானத்தைக் கேட்கின்றனர். உண்மையில் இத்தகைய சாத்தியப்பாடு பற்றித் தொழிலாளர்களை ஏமாற்றுகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடிப்படை வர்க்கத் தன்மை தேசிய முதலாளித்துவத் தன்மை என்பதைப் புறக்கணித்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பற்றித் தொழிலாளர் மத்தியில் மயக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியாகும் இது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இடதுசாரி ஐக்கிய முன்னணியின் உதவி ஏன் தேவையாகவிருக்கின்றது? கூட்டு அரசாங்க கொள்கையை முன்வைப்பவர்களில் முக்கியமான ஒருவரான திரு. டி.பி. இலங்கரத்தின அண்மையில் கம்பஹாவில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வாலிபர் சங்கங்களின் சம்மேளனத்தில் உண்மையைக் கக்கிவிட்டார். அவர் கூறினுர்: **ஒரு வரவு செலவுத் திட்டம் எத்தகையதாக அமைந்தாலும், மூன்று மாதங்களுக்கு துறைமுக வேலைநிறுத்தம் நடக்குமாயின் அவ் வரவு செலவுத் திட்டம் முறியடிக்கப்படும். ஆகவே தொழிலாள வர்க்கத்தின் உதவியின்றி இந்த அரசாங்கத்தை நடாத்த முடியாது."** சந்தேகமற்ற தெளிவான வார்த்தைகள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இடதுசாரி ஐக்கிய முன்னணி ஏன் தேவைப்படுகின்றது என்பது தெளிவு. ஏகாதிபத்திய முதலீடுகளைப் பாதித்துப் பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்கமுடியாத இவ்வரசாங்கம், தொழிலாளர் 'தலைவர்கள்' என்ற பெயருடன் பவனி வரும் சிலருக்கு சில மந்திரிப் பதவிகளைக் கொடுப்பதன் மூலம் தொழிலாளர் அதிருப்தியை நீக்கி அவர்களை வாங்க முயல்கின்றது. பொதுமக்களின் எதிர்ப்பை மௌனமாக்கவும், தீர்க்கமான தொழிலாள வர்க்க நடவடிக்கையைத் தடுக்கவும், இடதுசாரித் தலைவர்களின் பெயரும், தொழிலாள வர்க்கத்திடையேயுள்ள அவர்களின் செல்வாக்கும் அவர்களுக்கு அவசியமாகவிருக்கின்றது.

இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டு ஏன் அவசியம்?

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஒத்துழைக்கவும் கூட்டரசாங்கத்தில் சேரவும் கூட இடதுசாரி ஐக்கிய முன்னணி சடுதியாக விருப்பம் கொண்டுள்ளது. தொழிலாள வர்க்கத்தின் பல பகுதிகளை ஆச்சரியத்திலும் திகைப்பிலும் ஆழ்த்தியது. இச்சடுதியான மனமாற்றத்துக்குக் காரணம் என்ன? இன்றைய மந்திரிசபையிலுள்ள அனைவரிலும் பார்க்க எவ்வழியிலும் முற்போக்கானவரான திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவிற்கு ஆதரவளிக்க மறுத்தவர்கள், இன்றைய மந்திரிகளுக்கு எங்ஙனம் ஆதரவு கொடுக்க முன்வந்துள்ளனர்.



தோழர் நா. சண்முகதாசன்

அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி திரும்பவும் தலையெடுக்கின்றது என்று காரணம் கூறுவதை யாரும் நம்பமாட்டார்கள். வலதுசாரிகளிலிருந்து மிரட்டல் இதனிலும் பயங்கரமான உருவத்தில் ஏற்பட்ட 1662 ஜனவரி சதி முயற்சி போன்ற காலத்தில் இத்தலைவர்கள் அசையவில்லை. முதலாளித்துவ அதிகாரத்தை அனுபவிக்கவேண்டும் என்ற சந்தர்ப்பவாதக் காரணம் ஒருபுறமிருக்க, இடதுசாரி ஐக்கிய முன்னணி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி திரிபுவாத, சீர்திருத்தவாதத் தலைவர்களிடையே பொதுவான ஓர் அம்சம் தோன்றியுள்ளது. தொழிலாள வர்க்கத்திடையே கூடுதலாக வளர்ந்துவரும் புரட்சிகர உணர்வையும், இதன் விளைவாக ஏற்படும் வெகுஜனப் போராட்டங்களையும் கண்ட பீதியே அதுவாகும். 1963 ஜனவரி-பெப்ரவரியில்நடைபெற்ற இ.போ.ச. வேலைநிறுத்தத்தைக் காட்டிக் கொடுத்ததிலும் 21 கோரிக்கைகளை அரசாங்கத்துக்கும் முதலாளிமார்கட்கும் உடனடியாகச் சமர்ப்பிப்பதைத் தற்பொழுது எதிர்த்து நிற்பதிலும் நாம் இப்போக்கைக் காண்கின்ருேம்.

இத்தகைய ஆயத்தத்திற்குப்பின் 21கோரிக்கைகளை அரசாங்கத்துக்கும் முதலாளிமார்கட்கும் சமர்ப்பியாது விடுவதற்கு ஏதேனும் காரணத்தை எவராவது சிந்திக்க முடியுமா? டாக்டர் என். எம். பெரேரா தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டிக் கூட்டத்திற்கு வந்து, மேலும் ஒருமாதகாலமாவது வேண்டும் என்பது பற்றிப் பெரியதோர் உரை நிகழ்த்தினுர். இந்த அவசியத்தைக் கூறியபின் அவர் தொழிற்சாலைகளுக்குச் சென்று தொழிலாளர்களைத் தயார் செய்வார் என யாரும் எதிர்பார்த்திருப்பர். ஆனுல் அப்படியில்லை, அவர் அனுரா பண்டாரநாயக்காவுடன் கிரிக்கெட் விளையாட சுகாதார நிலையமான நுவரெலியாவிற்குச் சென்றுள்ளார்! கோரிக்கைகள் சமர்ப்பிப்பதைப் பின்போட்டதற்கு உண்மையான காரணம் "கூட்டு அரசாங்கப்" பேச்சுவார்த்தைகளின் சாதக நிலைமைகளைக் குழப்பக்கூடாதென அவர்கள் விரும்பியதே. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரி

# உரிமைப் போர் நடத்

## உலகத்

## அ

உலக சரித்திரத்தில், குறிப்பாகத் தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தினம்; முதலாளி வர்க்கத்தின் இரும்புக் கரங்களிலே சிக்கி, உழைத்து உருக்குலைந்த பாட்டாளி வர்க்கம் முதன் முதலில் ஆர்த்தெழுந்ததினம்; தொழிலாளி வர்க்கத்திற்கெதிராக முதலாளி வர்க்கம் அடக்குமுறையைக் கையாண்ட தினம்; அவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறையை எதிர்த்து தொழிலாளி வர்க்கம் வீரம் மிக்க சமர் புரிந்த தினம்; துப்பாக்கிக் குண்டுகளை எதிர்த்து தொழிலாளர் படைதிரண்ட தினம்; தொழிலாள வர்க்கத்தின் தியாகச் செம்மல்களின் செங்குருதி வீதிகளில் ஆறுபோல் பெருக்கெடுத்த தினம்; அந்த இரத்தந் தோய்ந்த சின்னமாகிய செங்கொடியை உயர்த்திப் பிடித்து 8 மணிநேரம் தான் வேலை செய்வோம் என்று தொழிலாளர் ஒற்றுமைக் குரல் எழுப்பிய தினம்; நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் தமது சந்ததி வாழவேண்டுமென்று தூக்குமேடை ஏறிய தினம்; தூக்குமேடைக்கும் துப்பாக்கி முனைக்கும் இரையான இன்னுயிர்களின் பேரில் "முதலாளித்துவம் ஒழிக" என்று சபதம் செய்த தினம்; மேதினம்!

அத் தினம் வீரத்தின் வெற்றித் தினம். தொழிலாளி வர்க்கம் ஐக்கியப் பட்டால் எதிர்த்து நிற்க இவ்வுலகில் வேறு சக்தி இல்லை என்பதை நிரூபித்த தினம். சுரண்டுபவர்களை சுட்டெரிக்கும் தினம். காட்டிக் கொடுப்போரை ஓட்டம் பிடிக்கச் செய்யும் தினம். உலகத் தொழிலாளரே ஒன்றுசேருங்கள் என்று கோஷமிடும் தினம்!

1884-ம் ஆண்டு அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனம் கூடியது. சகல தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்து தமது குறைகளை நீக்க ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டுமெனத் தீர்மானித்தனர். 1886 மே முதல் தேதி ஆர்ப்பாட்டம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தின் அடிப்படைக் கோரிக்கை 8 மணி நேரம் வேலை. இதையொட்டி அமெரிக்காவின் முக்கியநகரங்கள் பலவற்றில் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. மே மாதம் முதல் தேதி வேலை நிறுத்தம் உச்ச நிலையை அடைந்தது.

சிக்காக்கோ நகரம் போராட்டத்தின் மூலஸ்தலமாகக் காட்சி தந்தது. இங்குமட்டும் 80,000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். அமெரிக்க முதலாளி வர்க்கம் தனது சுயரூபத்தைக் காட்டியது. 14, 16, 18 மணி நேரம் வேலை வாங்கி தொழிலாளர்களைச் சுரண்டியவர்கள் விட்டுக் கொடுப்பார்களா? மே மாதம் 3-ம் திகதி வேலைநிறுத்தம் செய்து ~~சமாதானமாக~~ நின்ற தொழிலாளர்கள் மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. பலர் உயிரிழந்தனர். வேறு பலர் காயமடைந்தனர்.

மறுநாள் 4-ம் திகதி சிகாகோ நகரமெங்கும் தொழிலாளர் ஊர்வலம். ஹே மார்கட் சதுக்கத்தில் தொழிலாளர் அனைவரும் ஒன்று சேர்ந்தனர். துப்பாக்கிப் பிரயோகத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கூட்டம் நடைபெற்றது. பல தொழிலாளர்கள் கூட்டத்தில்பேசினர். கூட்டத்தின் முடிவில் பொலிசார் கூட்டத்தைக் கலைக்க முனைந்தனர். குண்டாந் தடிப் பிர

# கட்சியில் மா

இலங்கைகம்யூனிஸ்ட்கட்சியின் காங்கேசன்துறைக்கிளையில் நாலு பெண்கள் சேர்ந்திருக்கிருர்கள். கடந்த காலத்தில் கட்சி, முக்கியமாக யாழ் பிரதேசத்தில், மாதர் மத்தியில் வேலை செய்வதையும், அவர்களைக் கட்சியின் அணியில் சேர்த்துக்கொள்வதைப் பற்றியும், சிறிதேனும் சிந்திக்கவில்லை. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கு, சென்ற ஜனவரியில்

# ...துக்கு புரட்சிகரத் தலைமை அளிப்போம்

## ...ற கூட்டரசாங்கம் நாட்டுக்கு நன்மை பயக்காது

## ...ம் அரசாங்கத்துக்கு தொழிலாளர் துரோகிகள் ஆதரவு

...டியுமா?
...பெரேரா
...க் கமிட்
...வ ந்து,
...லமாவது
...பற்றிப்
...நிகழ்த்தி
...யத்தைக்
...தொழிற்
...வு தொழி
...ர் செய்
...நிர்பார்த்
...அப்படி
...ரா பண்
...கிரிக்
...சுகாதார
...லியாவிற்
...கோரிக்
...தைப் பின்
...மையான
...டு அர
...ர்த்தைக
...மைகளைக்
...அவர்கள்
...கா சுதந்
...டதுசாரி

ஐக்கிய முன்னணியும் பல விஷயங்களில் ஒரே கருத்துக் கொண்டிருப்பதில் ஆச்சரிய மில்லை.

இடதுசாரித் தலைவர்களே இன்றைய தமது இக்கட்டான நிலைமைக்குப் பொறுப்பான

**நா. சண்முகதாசன்**

தேசிய அமைப்பாளர், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி.

வர்கள். புரட்சிகரப் பாதையை மறுத்தபின், இராணுவம் பொலிசைப் பாவித்தும், உத்தியோக பூர்வமாகக் கருங்காலித் தனத்திற்கு ஊக்கம் கொடுத்தும் வேலைநிறுத்தப் போராட்டங்களை முறியடித்த தொடர்ச்சியான தொழிலாள வர்க்க விரோதக் கொள்கையைக் கடைப்பிடித்த வரலாறுடைய மதிப்பிழந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை ஆதரிப்பதைத் தவிர அவர்களுக்குப் பாராளுமன்றப் பாதையில் வேறொரு தீர்வும் காணமுடியாது.

ஒரு தொழிலாள வர்க்கம் எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தை நடாத்துவதற்காக முற்போக்கு முதலாளித்துவக் கட்சியுடன் சேரக்கூடாது என்று நாம் கூறவில்லை. அத்தகைய சந்தர்ப்பங்கள் எழுகின்றன. ஆனல் அவை புரட்சிகர அலையின் உச்சகட்டத்திலே, பிற்போக்கை எதிர்த்த புரட்சிகரப் போராட்டங்களின் பொழுதே எழுகின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களில் புரட்சிகர அரசாங்கத்தின் பங்குதாரர்களாகப் பங்குபற்ற முடியும்.

பாராளுமன்ற அரசியல் வரையறைக்குள் தொழிலாள வர்க்க நலனுக்குச் சாதகமான தீர்வு இன்றைய நெருக்கடிக்குக் காணமுடியாதென்பது எமது உறுதியான அபிப்பிராயம். ஆகவேதான் நாம் இந்நெருக்கடியிலிருந்து தப்ப புரட்சிகரப் பாதையை வலியுறுத்துகின்ருேம். இன்று நிலவும் முதலாளித்துவ அரசாங்க அமைப்பில் தொழிலாள வர்க்கத்திற்கு விடிவு கிடையாது என்பதை அவர்களுக்கு விளங்கப்படுத்தல் வேண்டும். இன்றுள்ள அரசாங்க இயந்திரத்தை (பிரதானமாக பட்டாளம், பொலிஸ்) முறியடித்து புதிய அரசாங்க இயந்திரமாகிய பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை ஏற்படுத்திலுலே தொழிலாள வர்க்கம் அதன் நோக்கமாகிய சோசலிஷத்தை ஸ்தாபிப்பதில் வெற்றி காணமுடியும். வேறு வழி கிடையாது.

இதற்கிடையில் தற்காலிக கட்டங்கள் இருக்கமுடியும். ஆனல் அக்கட்டங்கள் அனைத்திலும் வெகுஜனங்களின் புரட்சிகர நடவடிக்கையே தொழிலாள வர்க்கத்துக்குப் பயன்தரும். பின்கதவுப் பேச்சுவார்த்தைகள் பயன்தர மாட்டா.

புரட்சிகரச் சக்திகளை நாம் பொறுமையாக ஒன்றுசேர்க்க வேண்டும் என்பதையே இது குறிக்கின்றது. எல்லாவற்றிலும் பார்க்க புரட்சிகரத் தலைமையளிக்கக்கூடிய புரட்சிகரத் தொழிலாள வர்க்கக் கட்சி அமைப்பதையும், இன்று இடதுசாரி இயக்கத்தில் ஊடுருவியுள்ள சீர்திருத்தவாத, திரிபுவாதக் கருத்துக்களை எதிர்த்துப் போராடுவதையும் இது குறிக்கின்றது.

தொழிலாள வர்க்கத்தைச் சரியான புரட்சிகரப் பாதையில் வளர்த்தெடுப்பதற்கும் தொழிலாள வர்க்கத்திற்குப் புரட்சிகரத் தலைமை கொடுக்கக்கூடிய புரட்சிகரக் கட்சியை அமைப்பதற்கும் இவ்வருட மே தினத்தில் சபதம் எடுப்போம்.

21 கோரிக்கைகளை எவ்வழியிலாவது காட்டிக்கொடுப்பதை எதிர்த்துத் தொழிலாள வர்க்கத்திற்கு எச்சரிக்கை கொடுப்போம். இன்றுள்ள முதலாளித்துவ அமைப்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி — இடதுசாரி ஐக்கிய முன்னணிக் கூட்டமைப்பினுல் தொழிலாள வர்க்கத்திற்கு நன்மை கிடைக்கலாம் என்ற மயக்கத்தைத் தெளிவுபடுத்துவோம். புரட்சிகர நடவடிக்கை மூலமே இன்றைய நெருக்கடிக்கு முடிவும், தொழில்ாள வர்க்கத்திற்கு விடிவும் ஏற்படும் என்பதை விளங்க வைப்போம்'

# ...நடத்திய உழைப்பாளர் திருநாள்

## ...லகத் தொழிலாளரை ஒன்றுசேர அறைகூவும் மே தினம்

...ப்பட்டது.
...ர். வேறு
...தனர்.
...திகதி
...தம் தொழி
...ஹே மார்
...தொழிலா
...ன்று சேர்ந்
...பிரயோ
...த் தெரி
...நடைபெற்
...லாளர்கள்
...ர். கூட்டத்
...பொலிசார்
...க முனைந்
...தடிப் பிர

யோகம் செய்தனர். இதே வேளையில் ஓர் எறிகுண்டு வெடித்தது. தொழிலாளர் கட்கும் போலிசாருக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டது. இரு சாராரிலும் பலர் உயிரிழந்தனர். தொழிலாளர் பலர் உயிரிழந்தனர்.

பலர் கைது செய்யப்பட்டு அவர்கள்மேல் வழக்குத் தொடரப்பட்டது. அவர்கள்மேல் சுமத்தப்பட்ட குற்றம், எறிகுண்டிற்கு இவர்கள் தான் காரணம் என்பதே. விசாரணையின்போது குற்றவாளிகள் இவர்களென நிரூபிக்கப் படவில்லை. ஆனல் குண்டெறிந்ததற்கு இவர்கள் தான் காரணம் என்று நீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்தது. சிலர் மன்னிப்புக் கோரினர். தூக்கு தண்டனை சிறைத் தண்டனையாக மாற்றப்பட்டது. ஆனல் மற்றவர்கள் மன்னிப்புக் கோர மறுத்தனர். தூக்கு மேடையில் வீர மரணம் அடைந்தனர். மன்னிப்புக் கோர மறுத்து மரணமடைந்தவர்கள் அல்பேட் பார்சன்ஸ், ஆகஸ்ட் ஸ்பைஸ், ஏங்கல்ஸ் ஆகியோர். இவர்கள் தூக்கிலிடப்பட்டனர். ஆனல் குண்டெறிந்தவன் ஒரு போலிஸ்காரன். குழப்பம் விளைவிப்பதன் நோக்கத்துடன் எறிந்தான் என்பது பின்புதான் தெரியவந்தது.

உயிரிழந்தவர்களின் இறுதி வார்த்தை—

''எமது கல்லறைகளின் மௌனம் எமது சொற்பொழிவுகளை விட அதிகம் கதைகள் சொல்லும்'' என்பதே.

1889-ம் ஆண்டில் இரண்டாவது சர்வதேசியம் பாரிஸ் நகரில் கூடிய போது உலகம் முழுவதும் மே முதல் தேதி உலகத் தொழிலாளர் தினமாகக் கொண்டாடப் படவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

ஹே மார்கட் சதுக்கத்தில் சிந்திய இரத்தத்திலிருந்து பிறந்தது மே தினம். உரிமைப் போர் நடத்திய உழைப்பாளர்களின் தியாகத்தில் விளைந்தது மே தினம். ஒற்றுமையின் சக்தியை உலகுக்கு எடுத்துரைப்பது மே தினம்.

உலகிலும் சரி, எமது நாட்டிலும் சரி, அன்று முதல் இன்றுவரை தொழிலாளிவர்க்கத்திற்காக உயிரிழந்த தியாகிகளின் இரத்தத்தின் சின்னமாகிய செங்கொடியை உயர்த்திப்பிடித்து அவர்களின் ஞாபகார்த்தமாக நடத்தும் மே தினத்தின், தொழிலாளி வர்க்கத்தின் இறுதி விமோசனத்திற்காக எமது நாட்டிலும், உலகம் முழுவதிலும் சோஷலிஸத்தின் வெற்றிகளை, தொழிலாளி வர்க்கமும் மக்களும் அனுபவிக்க சளையாது போரிடுவோமென சபதம் செய்வோம். மே தினத்தின் எமது முன்னேரின் தியாகத்தையும், எமது கடமைகளையும் நினைவுபடுத்தி ஒற்றுமையுடன் முன்செல்லுவோம்.

**-சத்தியன்**

## ...யில் மாதர்கள்

...னிஸ்ட்கட்
...றைக்கிளை
...ர் சேர்ந்தி
...ந்த காலத்
...மாக யாழ்
...தர் மத்தி
...தையும்,
...ன் அணியில்
...தைப் பற்
...சிந்திக்க
...ம்யூனிஸ்ட்
...னவரியில்

நடந்த 7வது மாநாட்டில் புரட்சி கரத் தலைமை கொடுக்கப் பட்டபொழுது, மாதர் மத்தியில் கட்சியை வளர்ப்பதற்கு முழு முயற்சியும் எடுக்கப்பட வேண்டுமென முடிவு செய்யப் பட்டது. அதற்கேற்ப காங்கேசன்துறைக்கிளை, முதன் முதலாக யாழ் பிரதேசத்தில், பெண்களைச் சேர்த்துக் கொண்டது. இதை மற்றக் கிளைகளும் பின்பற்றுமென நம்புகிருேம்! (ந.நி)

## தொடக்கி விடு போராட்டம்! போ! போ! வீரா!

நில்லங்கே! பாரிங்கே! நிமிட நேரம்
நிலையில்லை உலகினிடை வாழும் காலம்

கல்லோடும் மண்ணேடும் கடும் போராடிக்
கஞ்சிக்காய் வதங்கிவிழும் உயிர்கள் கோடி

அல்லலிடை அவனியிதை அழகாய்க் கட்டி
அழிகின்ருன் உழைப்பாளி நெஞ்சம் பொங்கத்

தொல்லையினை நீக்கிவளம் காண வேண்டும்
தொடக்கிவிடு போராட்டம்! போ! போ! வீரா!

அன்னமில்லை; உழைப்போர்க்கேன்? ஆடை யில்லை!
அழுகின்ருர் அவர்துன்பம் பணத்தார் முன்னே,

சின்னதிலை! சினந்தெழுந்தாற் தெரியும் வீணர்
சிதைபடுவார்! சிந்திப்பார்! உழைப்போ ரொன்றிப்

பொன்னுடலைக் காத்துயரப் புவன மீதிற்
போர்தொடுத்தாற், புரிந்துவிடும் புரட்சிப் பாதை!

இன்னுமிதை உணராது இருக்கும் வீணர்
இழிந்துபடப் போராடு! போ! போ! வீரா!

பட்டுடலைக் காத்தபண மூடைக் கூட்டம்
பறந்தகல உழைப்போரே ஒன்றி நன்றே

நட்டகொடி செங்கொடியின் கீழே யெங்கள்
நல்லாட்சி வளரட்டும். விரைவாய் வீரா!

எட்டிநட புரட்சிவழி! வதைக்கும் துன்பம்
இன்றகலப் போராடு! நமை யெதிர்க்கும்

துட்டரெலாம் அகலட்டும் வெற்றிப் போரைத்
தொடக்கிவிடு தோழாநீ! போ! போ! இன்றே!

''நில்லுங்கள்! போராட்டம் வேண்டாம் வீணே,
நிலையாகப் பாராளும் மன்றத் துள்ளே

கல்லாக இருந்துங்கள் கவலை போக்கிக்
காட்டுகிருேம்'' என்கின்ருர் அவரோ வீணர்

சொல்லுங்கள்! பயத்தாலே தொடை நடுங்கும்
சோம்பேறிக் கூட்டமிலை உழைப்போர் கூட்டம்

செல்லுங்கள் செங்கொடியைக் கரத்தே தாங்கிச்
செங்குருதிப் போராட்டம் தொடக்க வேண்டும்

**-செ. மகேந்திரன்.**

தொழிலாளி

# கியூபா போராட்டத்தை எதிர்த்த சமரசத் தலைவர்

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சரணடைந்தது யார்?

## பீட்டர் கெனமனு பிரேமலால் குமாரசிறியா?

கடந்த வாரங்களில் திரிபுவாதிகளின் பத்திரிகைகளில் வந்த செய்திகளையும் கோயபல்ஸை தோற்கடிக்கும் பொய்ப் பிரச்சாரங்களையும் பார்க்கும் போது வெகு சீக்கிரத்தில் நீங்கள் ''கணத்தையை'' (புதைகுழி) நோக்கிச் செல்வீர்கள் என்பதில் சந்தேகமே கிடையாது. இது போக நீங்கள் நடத்தப் போகும் சம்மேளனத்தைப் பற்றி நீங்கள் கொடுத்த அரசியல் அறிக்கையைப் பார்த்த பொழுது கொஞ்ச நஞ்சமிருந்த சந்தேகமும், உங்களது கடைசி வழிப் பயணத்தைப் பற்றிய சந்தேகமும் அறவே தீர்ந்து விட்டது.

### ★ கேள்வி

உங்களது பத்திரிகைகள் மாத்திரமல்ல உங்களது தலைவர்களைப் பற்றியும் நாடு அறியும். அவர்கள் வெறும் பொய்யர்கள் மாத்திரமல்ல, வெளவால்களையே வெட்கித் தலைகுனிய வைக்கும் ஒரு திருக்கூட்டமாகும். இதனால் யாருமே ஏமாந்துவிடப் போவதில்லை. நீங்களே ஏமாந்துவிடப் போகிறீர்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்த்து விடுவோம்.

உங்களது சம்மேளனத்திற்காக நீங்கள் வெளியிட்ட அரசியல் அறிக்கைக, ஆரம்பப் பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பற்றி இவ்வாறு கூறுகிறது: அது இடதுசாரிக் கட்சிகளுக்கு எதிரான நடவடிக்கை எடுத்தது; சம்பள உயர்வை எதிர்த்தது; வேலை நிறுத்த சமயங்களில் கருங்காலிகளாக இராணுவத்தை உபயோகப் படுத்தியது; தொம்பே சோஷலிஸத்தின் பேரால் கிராமிய விவசாய மக்களை தொழிலாளிகளுக்கு எதிராகத் திரட்டியதுடன்......... இத்தியாதி. இப்படிப் பட்டவைகளைக் கூறித்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அறிமுகப் படுத்தி வைத்திருக்கிறீர்கள்.

இதே தலைமையினால் சில நாட்களுக்கு முன் கூறிய இடதுசாரித் தன்மையை நோக்கி முன்னேறும் ஒரு கோஷ்டி சம்பந்தமாக நாடு பூராவும் பறையடித்துக் கூறியதைப் பற்றி ஒருவார்த்தையேனும் இதில் குறிப்பிடாதது ஏனோ? ஒரு இடத்தில் இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கு அரசாங்கம் அமைக்க பரிபூரண உரிமை உண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் 1960-ம் வருடம் நடந்த தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குக் கிடைத்துள்ள வோட்டுகளின் எண்ணிக்கையைவிட ஒரு லட்சம் வோட்டுகள் இடதுசாரிகளுக்கு கூடுதலாகக் கிடைத்திருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளது.

இப்பொழுது உங்கள் திரிபுவாதத்தலைவர்களிடம் இதைக் கேளுங்கள்.

1. இடதுசாரியை நோக்கி முன்னேறும் ஸ்ரீலங்கா கோஷ்டியொன்று இருப்பதாகத் தெரிந்துகொண்டது இந்த அறிக்கையை தயார் செய்ததிற்குப் பிறகா?

2. இடதுசாரிகளுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட கூடுதல் வோட்டுகள் இருக்குமாயின் புதிதாக ஏற்படப் போகும் கூட்டு அரசாங்கப் பேச்சுவார்த்தைகளின் அர்த்தம் என்ன?

மேலும் உங்களது அரசியல் அறிக்கையில் ஹாஸ்யம் ததும்பும் அழகான அபூர்வ சொற்கள் உபயோகப் படுத்தியிருக்கிறீர்கள். ''ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு கீழாகும் நோக்குடன் குமாரசிரி குழு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் தொடர்பு கொண்டு நடத்திவந்த வியாபாரம் இடதுசாரி ஐக்கிய முன்னணிக் கொள்கையினால் இல்லாமல் போய் விடும் என்ற பீதியில்...''

### ★ சரணடைந்தது யார்?

இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சரணடைந்தது யார்? பி. குமாரசிரியா அல்லது பி. கெனமனு என்பதைப் பற்றி சவாலுடன் கேட்க விரும்புகிறோம். பி. கெனமன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சரணடைந்திருப்பதற்கு முக்கிய காரணமாயிருப்பது சில வேளை பழைய வியாபார ருசியின் காரணமோ தெரியவில்லை என்பதை நாங்கள் பகிரங்கமாகவே கேட்க விரும்புகிறோம். உங்களது குழுவில் அங்கத்தவரல்லாத, ஆனால் திரு. கெனமன் அவர்களின் மிக மிக நெருங்கிய நண்பரும், கறுவாக்காட்டில் பிரசித்தமான வியாபாரியும், புகழ் பெற்ற அப்புக்காத்து நியாயதுரந்தரருமான இந்த நண்பருடனுள்ள தொடர்புகள் சம்பந்தமாக கூற எங்களை நீங்கள் நிர்ப்பந்திப் பீர்களாயின் அதைப் பகிரங்கமாகக் கூறுவதற்கு நாங்கள் தயார் என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

வர்த்தகம் சம்பந்தமாக பேசும் பொழுது மாடி வீடுகளை அமைத்து கூடுதல் கூலிக்கு கொடுக்கும் உங்களது கட்சியின் தலைவரின் மனைவியை மறைத்துப் பேசுவது மிக மிகத் தப்பாகும். அதைப் போலவே தனது மனைவியின் பெயரால் வாடகைக் கார் வியாபாரஞ் செய்யும் உங்களது தொழிலாளத் தலைவரின் பெயரையும் மறந்து விடாதீர்கள். அது மாத்திரமல்ல, கையொப்பத்துடனேயே கட்சிக்கு செல்லவேண்டுமென குறிப்பிட்ட வியாபாரத்திற்காக ரூபா ஏழாயிரத்திற்கு மேலாக வாங்கிய சோவியத் நண்பர்கள் சங்கத்தின் நியாயதுரந்தரர் சம்பந்தமாக நீங்கள் என்ன கூறப் போகிறீர்கள்? அதே வியாபார ஸ்தலத்திலிருந்து 1963-ம் வருடத்திற்கு மாத்திரம் றிசீட்டுடன் ரூபா பதினெட்டாயிரத்திற்கும் அதிகமாக வாங்கிய உங்களுடைய புத்தகக் கடையின் முதலாளித் தோழரைப் பற்றி கூறுவதற்கு என்ன இருக்கிறது? இவைகள் சம்பந்தமாக கட்சித் தோழர்களை ஏமாற்றும் ரீதியில் பொய்களைக் கூறாமல் பகிரங்கமாகவே விவாதம் பண்ணுவதற்கு நாம் உங்களை அழைக்கிறோம்.

> **திரிபுவாதிகள் சம்மேளனம் நடைபெறுமுன்பு எழுதப் பட்ட இப்பகிரங்கக் கடிதம், அவர்களின் மோசடிகளை அம்பலப்படுத்துகின்றது.**

### ★ கியூபாப் போராட்டம்

இந்த அறிக்கையின் இன்னுமொரு பகுதியிலுள்ள வேடிக்கையான ஒரு பகுதியாகும் இது. தாங்கள் தலைமை கொடுத்த போராட்டங்களின் வீரப் பிரதாபங்களைப் பற்றியதாகும். ''கியூபாவுக்கு ஆதரவளிக்குமுகமாகவும் கரீபியன் நெருக்கடியை சமாதான பூர்வமாகத் தீர்த்து வைப்பதற்குமாக மக்கள் இயக்கத்தை நடாத்திச் சென்றோம்.'' எவ்வளவு அழகான வார்த்தையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்?

இது அப்பட்டமான ஒரு பச்சைப் பொய் என்பதை சகல கட்சி அங்கத்தவர்களும் அறிவார்கள். கியூபாவுக்கு ஆதரவளிக்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடாத்திச் செல்லுவதற்கு பிரேமலால் ஒத்துக்கொண்டதைக் கண்டித்து நடவடிக்கை எடுத்த தேசிய அமைப்பாளர் சமர(ச) விக்கிரமா அவர்கள் இவ்வூர்வலத்தில் கலந்துகொள்ளக் கூடாதென கட்சி அங்கத்தவர்களுக்கு ஆணையிட்டார். இதன் பிரதிபலன்தான் இன்று அப்பகுதியிலுள்ள ஒருவருமே இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ளவில்லை. கட்சித் தோழர் ஒருவருக்கு படுகாயம் ஏற்பட்டு ஏழு தையல்போட்டு ஆஸ்பத்திரியில் இருக்கிறார் என்ற செய்தி வந்ததும், ''அவனுக்கு அடித்தது போதாது'' என்று கூறியவர் அரசியல் குழு அங்கத்தவரான எல். டபிள்யூ. பண்டித்தாவாகும்.

''அவ்வூர்வலத்தின் போது அடிபட்டு பிரேமலால் குமாரசிரி மரணமடைந்திருந்தால் நாங்கள் செங்கொடியினால் அலங்கரித்து அவரை அடக்கம் செய்திருப்போம்'' என்று கூறியவர் ஸ்தாபன அமைப்பாளர் சமரவிக்கிரமா அவர்கள் அல்லவா? சீ... வெட்கமில்லை...இப்பொழுது கூறுகிறார்கள் கியூபாப் போராட்டத்திற்கு நாங்கள்தான் தலைமை வகித்தோம் என்று. உங்களுடைய அறிக்கையில் பஸ் ஊழியரின் வேலைநிறுத்தப் போராட்டத்தைப் பற்றியும் அதில் நீங்கள் வகித்த கருங்காலித் தனத்தின் தலைமையைப் பற்றியும் குறிப்பிடவில்லை. அந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற போராட்டத்தைப் பற்றி நீங்கள் குறிப்பிடாததின் மூலமே நீங்கள் வகித்த கருங்காலித் தனத்தை இதிலிருந்து ஏற்றுக் கொள்கிறீர்கள் என்று தானே அர்த்தம்.

திரிபுவாதிகளின் சம்மேளனத்திலிருந்து இன்னுமொரு அறியக் கூடிய விஷயமென்னவென்றால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளூர்க் கட்சி விஷயங்களில் தலையிடுகிறது என்று குறிப்புக் கூறுகிறது. சரி அதையும் எடுத்துப் பார்ப்போம்! 1962-ம் வருடம் ஏப்ரல் மாதம் நடைபெற்ற விவாதத்தின் போது வோட்டெடுப்பு தினத்தன்று, குடிவகை சம்பந்தப்பட்ட ஒரு விருந்துக்கு மனைவியருடன் வரும்படி சகல மத்தியக்கமிட்டி அங்கத்தவர்களுக்கும் ஒரு வாரத்திற்கு முன்னேயே அழைப்பு அனுப்பியவர்கள் சீனத் தோழர்களா அல்லது சோவியத் ஸ்தானிகராலயமா என்பதைப் பற்றி உங்கள் தலைவர்களைக் கேளுங்கள். மத்தியக் கமிட்டியில் நடந்த இந்த விவாதத்தின் போது உண்மையான மார்க்சிஸ-லெனினிஸ வாதிகள் இரண்டே வோட்டுகள் மூலம் தான் தோல்வியடைந்தார்கள்.

அன்று வி. ஏ. சமரவிக்கிரமா கூட வோட்டுக் கொடுத்தது எங்களோடுதான். தலையீடு நடத்துவது யார்? இந்த தலையீடு நடத்துதல் சம்பந்தமாக மிகவும் நல்ல முறையில் அறிந்தவர் தான் புதிதாக நியமிக்கப்பட்ட தொடர்பு அதிகாரியான அப்பன் பண்டிதாவேயாகும். ரூபா ஏழாயிரத்திற்கு வரவேற்பு தலையீட்டு விழா நடத்தியது சம்பந்தமாக நாங்கள் கூறாமலேயே • நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

பரவாயில்லை, எப்படியோ உங்களது சம்மேளனத்தை வெளியூர் ஆசாமிகளைக் கொண்டு நிரப்பி, உள்ளூர்த் தோழர்களின் கேள்விகளுக்கு பதிலிறுக்க நேரமில்லாமலும், அறிமுகமாகாத ஆசாமிகளைக் கெண்டு ''மா''நாடு நடந்தேறிவிட்டது.

இதன் பிறகு இடதுபக்க ஸ்ரீலங்காக் காரர்கள் என்று யாரைக் குறிப்பிடுவது. ஸ்ரீமான் விக்கிரமசிங்காவின் பழைய சிஷ்யனான மாநாம சமரவீராவையா அல்லதுடாக்குத்தர் ஐயாவின் மைத்துனரான கௌரவ திரு. தொழில் மத்திரி அவர்களையா?

இந்தக் கேள்வியைப் பற்றி நான் ஒரு சமசமாஜக் கட்சி அங்கத்தவரிடம் கேட்ட போது அவர் ஒரே ஒரு பெயரைத்தான் குறிப்பிட முடியும் என்று கூறினார். அவர்தான் திரு. இலங்கரத்னவாகும் என்றார். ஆனால் திரு. இலங்கரத்ன அவர்கள் வியாபாரம் செய்பவர்களுடைய நெருங்கிய நண்பராயிருந்து வரவில்லையா? இத்தனை வருடகாலமாக கட்சியின் உட்கட்சி விவாதங்களின் போது இதை அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்களே! எதுவாயிருந்தாலும் கூட பர்த்தலோமஸ் பி. கெனமன் அவர்களிடம் இதைக் கேட்டு எங்களுக்குப் பதில் கொடுங்கள்.

இங்ஙனம்
ஒரு பழைய ஆப்த நண்பன்.

# வடபகுதி திரிபுவாதிகள் பிற்போக்காளருடன் கூட்டு

# 'உள்கட்சிப் போராட்டம்' எங்கே?

## ஒரு கட்சித் தோழரின் கேள்வி

வடபகுதியில் திரிபுவாதிகளின் வேண்டாத நடவடிக்கைகள்; பிற்போக்கு உறவுகள் குறித்து கவனம் எடுத்துக் கொண்ட பல தோழர்கள், இளைஞர்கள் அவர்களை உதறித் தள்ளி சரியான பாதைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். வடபகுதியில் திரிபுவாதிகளின் கூடாரமான அளவெட்டிக் கிளையிலிருந்து மூன்று கட்சித்தோழர்கள் சமீபத்தில் வெளியேறினர். அவர்களில் ஒருவரான தோழர் கா. நடராசா அவர்கள் ஐ. ஆர் அரியரத்தினம் அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் சில பகுதிகளை இங்கு பிரசுரிக்கிறோம்.

உண்மையான மாக்ஸிஸ லெனினிஸக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் எனக்கு நீங்களும் வேறுசில தலைவர்களும் என்ன கூறினீர்களெனில் சண்முகதாஸன் தலைமையில் நடந்த போராட்டத்தை அவரது தனிப்பட்ட பிரச்னையால் ஏற்பட்டது, அதற்கும் சிந்தாந்தக் கருத்து வேறுபாடுகளுக்கும் தொடர்பு இல்லையென படுபொய் கூறி என்னை நம்பவைத்தீர்கள். இனிமேல்தான் சீன சோவியத் கருத்துவேறுபாட்டுப் போராட்டம் கட்சியில் நடக்கும். நீங்கள்தாராளமாக உள்கட்சிப் போராட்டம் நடத்தலாம் என்று கூறினீர்கள். நான் இவைகளை நம்பினேன். ஆனால் நீங்களும் உங்களைச்சேர்ந்த தலைவர்களும் தான்தோன்றித்தனமாக நடக்கிறீர்கள். எந்த உள்கட்சிப் போராட்டம் நடத்தலாமென்றீர்களோ அதற்கு எனக்கு உரிமை தரவில்லை. அளவெட்டிக்கிளையில் நான் அங்கம் பெறுகிறேன். அளவெட்டிக்கிளை கூடியது. அந்தக் கூட்டத்தில் நான் சர்வதேச ரீதியான கருத்துவேறுபாடுகள்பற்றிப் பேச முற்பட்டபோது ஒரு இளம் தலைவரான எம், ஏத்தோழர், பலத்த சத்தம் போட்டு, உந்தச் சீலையில் கதை இங்கை வேண்டாம். என்று சீறி எழுந்தார். என்னைப்பேசவிடாது தடுத்தார். இது தானா உள் கட்சிப் போராட்டம் நடத்த இருக்கும் உரிமை? பின்னர் பிரதேச மாநாடு என்று ஒன்றை ஏற்பாடு செய்தீர்கள். அதில் யாரையாவது ஏதாவது பேச அனுமதித்தீர்களா? அறிக்கைகளை சமர்பிக்காத, விவாதமே நடக்க விடாத உத்தியோகத்தர் பட்டியல்வாசிப்பு மாநாடாக மட்டும் நடந்தது.

யாழ்ப்பாணத்தில் உங்கள் நிலையை எடுத்துக்கொள்வோம். அன்று பிரதேச மாநாடு என்று ஒன்றை ஏற்பாடு செய்தீர்கள் உண்மையான மாக்ஸிஸ லெனிஸிஸத் தோழர்களைவிட உங்களுக்கு அதிக ஆதரவுஇருக்கிறது என்பதைக் காட்டவும் உத்தியோகத்தர் பட்டியல் வாசிக்கவும். நடந்தது என்ன? அங்கு உண்மை யெளியாயிற்று அன்று அந்தப் போலி மாநாட்டில் எத்தனைபேர் கலந்துகொண்டார்கள். யூன் 1ம் திகதி 1963ம் ஆண்டு நடந்த பிரதேச மாநாட்டில் கலந்துகொண்ட தோழர்களின் எண்ணிக்கையில் 5/1பங்கினர்தான் இருந்தனர். இவர்களில் ஒரு பகுதியினர் புதிதாக வலுவில் அங்கத்துவம் பதிவு செய்யப்பட்டவர்கள். அங்கத்தவர்கள் இல்லாதவர்களும், அனுமதிக்கப்பட்டவர்கள் தொகையைக் காட்ட அப்படியிருந்தும் மொத்ததொகை குறிப்பிட்டளவு மட்டுமே. முக்கியமான விஷயம் அன்றைய அந்தப் போலி மாநாட்டில் கட்சியின் ஒழுங்கு முறைகளுக்கு மாறாக குறிப்பிட்ட ஒரு முக்கியமான தோழர் கே. ஏ. சுப்பிரமணியம்) அவர்கட்கு எதிர்ப்புக்காட்டுவதற்கும் வேறு சில மறைமுகக் காரணங்களுக்காகவும் அவர் மீது துவேசம் கொண்ட இரு உறவினரையும் இன்னும் ஒருவரையும் மாநாட்டில் எந்தவிதமான காரணமும் இல்லாமல் முழு நிகழ்ச்சியிலும் பங்குபற்ற அனுமதித்தது ஏன்? அவர்கள் கட்சியில் அங்கத்துவம் இல்லாதவர்கள் மட்டுமல்ல. கட்சி விண்ணப்பப் பத்திரங்கள் கூட நிரப்பாதவர்கள். இந்த ஒழுங்கு முறைக்கு அப்பாற்பட்ட வெட்கம் கெட்ட வேலையை ஏன் செய்தீர்கள்? பதில் கூறுவீர்களா? தன்னை இயக்கத்திற்கு அர்ப்பணித்து வேலைசெய்யும் ஒரு உண்மையான ஊழியர் தோழர் ஒருவருக்குத் தனிப்பட்ட எதிர்ப்புக்காட்ட கிளம்பியிருக்கும் இந்த வெட்கம் கெட்ட செய்கை எவ்வளவு கேவலமானது. இவற்றைச்செய்த நீங்கள் அவர் உண்மைக்காகப் போராடுகிறார் என்பதைத் தவிர வேறென்னகூறமுடியும்?

முடிவாக, நடந்த சம்பவங்களும் மேற்கொண்டும் நீங்கள் எடுத்துவரும் முயற்சிகளும் உண்மையான மாக்ஸிஸ-லெனினிஸத் தோழர்களுக்கு எதிராக நேர் நின்று போராடமுடியாத நீங்கள் பிற்போக்குவாதிகளின் கம்யூனிஸ எதிரிகளின் நண்பர்களாகிவிட்டீர்கள். உங்கள் சந்தர்ப்பவாத முயற்சி உங்களை எமது பரம விரோதிகளின் பிற்போக்காளரின் அணிகளுக்குத் தலைவர்களாக்கி விட்டதை இப்பொழுது நேரில் பாக்கிறோம்.

உண்மையான கம்யூனிஸ்டாகிய நான் எப்படி இன்னும் உங்களுடன் உறவு வைத்துக் கொள்ளமுடியும்? எனக்கு உண்மை தெரிந்துவிட்டது. சந்தர்ப்பவாதிகளாகிய உங்களுடன் இனி எவ்விததொடர்பும் எனக்கு இல்லை. இருக்கமுடியாது.

இந்நிலையில், கம்யூனிஸ்ட் கட்சியின் 116 தோழர்கள் மாக்ஸிஸ லெனிஸத் தோழர்களுக்கு விடுத்த வேண்டுகோளின் பேரில் கூட்டப்பட்ட 7வது தேசிய மாநாட்டு முடிவுகளை ஏற்று செயல்படுவதுதான் சிறந்த மார்க்கம். உண்மையான கம்யூனிஸ்டாக செயல் படுகிறேன்.

ஓங்குக புரட்சி.
இப்படிக்கு
கா. நடராசா.
(ஒப்பம்)

## மலர் வளையங்கள்!

பீட்டர் கெனமன், விக்கிரமசிங்ஹா போன்ற பாராளுமன்ற அங்கத்தவர்களால்கூட்டப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் 7வது மாநாட்டிற்கு "ஏராளமான மலர்வளையங்கள்" வந்து சேர்ந்தன என்று பத்திரிகைகள் மூலமாகத்தெரியவந்தது. திரிபுவாதிகளின் சுடுகாட்டுபாதயாத்திரையின் அறிகுறியாக இந்த மலர்வளையங்கள் வந்து சேர்ந்ததாயிருந்தால் அதைப்பற்றி நாம் ஆச்சரியம் கொள்வதற்கில்லை ஆனால், இந்த சம்பவத்தினால் வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் முன்னால் அவமானத்திற்கு ஆளாகிய இந்த திரிபுவாதப் பிண்டங்கள் முதலாளித்துவப் பத்திரிகைகளின் துணையுடன் இந்தஅவமானத்துக்குரிய காரணத்தை நேர்மையான மார்க்சிஸ லெனிஸிஸ வாதிகளின் தலையில் சுமத்தியுள்ளது மிகவும் வேடிக்கையாகவுள்ளது.

உண்மை என்ன? வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு மலர்ச்செண்டுகளை கொடுக்க வேண்டியிருப்பதால் திருமதி மோட் கெனமன் அவர்கள் அவரது உயர்தர ஆங்கிலத்தில் திரு. சமரவிக்கிரமாவிடம் இதற்கு ஆடர்கொடுக்கும்படி கூறினார். இதை அரைகுறையாகப் புரிந்துகொண்ட அவர் இயற்கையாகவேயுள்ள ஆவேசகுணத்துடன், பதட்ட நிலையுடன் மலர்ச்செண்டுக்குப் பதில் மலர் வளையத்திற்கு ஆடர் கொடுத்துவிட்டார், புரியாத ஆங்கிலத்தில் வேலை செய்யப் போனால் பாடையில் போவதற்குச் சொல்லவா வேண்டும்? தெரியாத ஆங்கிலத்தில் வேலைசெய்வதைவிட தெரிந்த சிங்களத்தில் வேலை செய்வது எவ்வளவோமேல்.

# ஆசிய ஆபிரிக்க மாநாட்டின் பிரகடனம்

ஆசிய-ஆபிரிக்க மக்கள் ஐக்கிய கவுன்சிலின் ஆறுவது மாநாடு, அல்ஜீரியாவில் 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 22 முதல் 27 வரை கூடி, சென்றதடவை நிக்கோசியாவில் (சைப்பிரஸ்) கூடியதின்பின் நடைபெற்ற சம்பவங்களை விவாதித்து, சரித்திரப் பிரசித்தி பெற்ற பாண்டுங் மாநாட்டின் கொள்கைகளைப் பலப்படுத்தவும் அமுல் படுத்தவும் கருதி, கெய்ரோ, கோனுக்றி, மோஷி மாநாடுகளின் தீர்மானங்களை மேலும் வற்புறுத்தி அவற்றை அனுசரிப்பதென தீர்மானித்துள்ளது.

தேசிய விடுதலைக்கான போராட்டம், எமது இயக்கத்தின் முதல் கடமை என்பதில் பூரண நம்பிக்கை வைத்து மாநாட்டு ஆரம்பத்தில் தலைவர் பென்பெல்லாமுன்வைத்த முக்கியமான பிரகடனத்தின் அடிப்படையில் ஆசிய-ஆபிரிக்கமற்றும் மக்களின் பூரண விடுதலை இல்லாமல் உண்மையான சமாதானம் சாத்தியமில்லை என்பதில் பூரண நம்பிக்கை வைத்து, உலக சமாதானத்திற்கு, ஆயுத பரிகரணம் அவசியம் என்பதிலும் நம்பிக்கை வைத்து, பாண்டுங் மாநாட்டின் 10 கோட்பாடுகளுக்கிணங்க மக்கள் மத்தியில் நல்லுறவும், பலதரப்பட்ட அரசியல் அமைப்புகளுள்ள இராட்சியங்கள் மத்தியில் சகஜீவனமும் அவசியம் என்பதையும் உணர்ந்து ஆசிய-ஆபிரிக்க மக்களை,

(அ) செயலிலும், சிந்தனையிலும், சுதந்திரப் போராளிகளுக்கு பிரயோசனமான உதவிகள் அளிக்கவும், தேசியவிடுதலைக்கான எமது செயல்களுக்கும் முயற்சிகட்கும்சரியான தொடர்புகள் ஏற்படுவதற்கு பொது முன்னணி ஒன்று நிறுவக்கூடிய நிலையை உருவாக்கவும் தம்மால் இயன்றவையனைத்தையும் செய்க என்றும்.

(ஆ) தேசிய பூரண விடுதலைக்காகப் போராடிவரும் எமது மக்களின் உண்மையான விடுதலைக்கான ஒரே ஒரு சாத்தியக் கூறாக கலோனியலிஸம், நவீன கலோனியலிஸம், இனவேறுபாடு ஆகிவற்றிற்கு எதிரான போராட்டத்தை துரிதப்படுத்துக என்றும் இம்மாநாடு அறைகூவி அழைக்கின்றது.

மறுபுறம், நாசகார சக்திகளுக்கெதிரான, சுதந்திரத்தினதும் சமாதானத்தினதும் பரமவைரிகளுக்கெதிரான வெற்றிதரும் போர்ராட்டங்களில், சர்வதேசிய நிலமை ஆசிய ஆபிரிக்க மக்களுக்குச் சாதகமாக வளர்ந்துள்ளது என்பதை, ஆசிய, ஆபிரிக்க மக்களின் ஐக்கிய கவுன்சிலின் ஆறுவது மாநாடு திருப்தியுடன் கவனத்தில் கொள்கிறது. கலோனியலிஸத்திற்கும், ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக எல்லாத் துறைகளிலும், மிகப் பெரிய வெற்றிகள் பெற்ற, இந்த நிலைமை, ஆசிய ஆபிரிக்க மக்களின் போராட்ட முன்னணியைப் பலப் படுத்த உதவியுள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில் அடிஸ் அபாபாவிலுள்ள ஆபிரிக்க ஐக்கியத்திற்கான இயக்கம் ஆபிரிக்காவிற்கும், உலகத்திற்குமோர் சரித்திர ஸ்தம்பமாக உள்ளது. அண்மையில் நடந்த அராபிய நாடுகளின் உச்சிமாநாடு ஐக்கியத்திற்கும் தேசிய விடுதலைக்குமான போராட்டத்திற்கு மிகவும் உதவியுள்ளது.

இருந்தாலும், ஆபிரிக்காவிலும் பல வெற்றிகள் நாம் அடைந்த போதிலும் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், ஏனெனில் ஏகாதிபத்தியம், தனது ஆயுதங்களை கைவிடவில்லை. அத்துடன் தனது பொருளாதார ஆக்கிரமிப்பினால் தனது ஆதிக்கத்தை ஸ்திரப்படுத்த எதையும் செய்யத் தயாராயுள்ளது. தமது செல்வத்திற்கும் தமது வருங்காலத்திற்கும் பூரண உரிமையாளர்களாக வருவதற்காக ஆசிய ஆபிரிக்க நாடுகள் இந்த முயற்சிகளை அம்பலப் படுத்த வேண்டும்.

இறுதியாக, வெளிநாட்டு யுத்த தளங்களையும், ஆக்கிரமிப்புத் தன்மையுள்ள இராணுவ ஒப்பந்தங்களையும் கண்டிப்பதுடன், எமது நடவடிக்கைகளில், எம்மிடையே, பிளவுகளையும், தப்பபிப்பிராயங்களையும் உண்டுபண்ண, ஏகாதிபத்தியம் தலையிடுவதை வன்மையாக நிராகரிப்பதுடன், ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் தன்மையுள்ள யுத்தக் கொள்கையை கண்டிப்பதுடன் ஆசிய ஆபிரிக்கமக்களின் ஐக்கியக் கவுன்சில், ஆசிய ஆபிரிக்க மக்களினது சரித்திர ஐக்கியத்தில், தகர்க்க முடியாத நம்பிக்கையை மேலும் வற்புறுத்துகிறது. உண்மையான சமாதானம், எமது மக்களின் ஐக்கியம், முன்னேற்றம், சுபீட்சம் ஆகியவற்றிக்கு காரணமாக உள்ளவற்றில் இதுவும் ஒன்று.

★ ஏகாதிபத்தியம் ஒழிக.

★ காலனி ஆதிக்கம் ஒழிக.

★ நவீன காலனி ஆதிக்கம் ஒழிக.

★ ஆபிரிக்க ஆசிய ஐக்கியம் நீடு வாழ்க.

இம்மாதம் முதல் வாரத்தில் பிரேஸில் நாட்டின் ஜனாதிபதியின் ஆட்சி அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தாசர்களால் கவிழ்க்கப்பட்டது. இக்கவிழ்ப்பை அமெரிக்க வட்டாரங்கள் (பிரேஸில் மக்கள் அல்ல) ஆரவாரத்துடன் வரவேற்று மகிழ்ந்தனர்.

★

**1961**-ம் ஆண்டு, பிரேஸில் ஜனாதிபதி ஜோன் குவாதிரிஸ் ராஜினுமாச் செய்தார். ''தனது திட்டங்களுக்கும் கொள்கைகளுக்கும் உள்நாட்டு — வெளிநாட்டு சக்திகள் முட்டுக்கட்டைகளும் தடைகளும் கொடுத்து தன்னை நிர்ப்பந்திப்பதால்'' ராஜினுமாச் செய்வதாக காரணம் காட்டினுர். அந்நேரம் உப-ஜனாதிபதியான யோ கொலாட் பிரான்ஸில் (சீன நட்புறவு விஜயத்தின்பின் திரும்பி வருகையில்) நின்ருர். அவரை நாட்டுக்குள் வரவிடாது அமெரிக்க எடுபிடிப் படைத்தலைவர் தடுத்தனர். ஆயினும் தனது பிறந்த பகுதியான தென்-பிரேஸில் ஊடாகப் பெருவாரி மக்கள் உதவியுடன் தலைநகர் அடைந்து பிரேஸில் காங்கிரஸால் (சட்டசபை) ஜனுதிபதி ஆக்கப்பட்டார். 1961-ம் ஆண்டு அமெரிக்காவின் எண்ணம் ஓரளவு வென்று குவாதிறிஸை நீக்க முடிந்தது. ஆயினும் அமெரிக்க எடுபிடி ஒருவரை ஜனுதிபதி ஆக்குவதில் படும்தோல்வியடைந்தது.

# பிற்போக்கு சக்திகளை முறியடிக்க மக்கள் சக்தி பலமுறல் வேண்டும்

# பிரேசில் தரும் பாடங்கள்

கொலாட் ஜனுதிபதி பதிவியேற்ற நாள்முதல், அமெரிக்க யங்கி ஏகாதிபத்தியம் ஒருபுறமும் பிரேஸில் மக்கள் (தேசிய முதலாளிகள் உட்பட) மறுபக்கமாகவும் மிகவும் சிக்கலான முரண்பாடுகளிலும் போராட்டங்களிலும் மோதிவந்தனர். இரண்டாண்டு காலத்தில் 7 அரசாங்க நெருக்கடிகளையும் எண்ணற்ற பொருளாதார நெருக்கடிகளையும் அமெரிக்கா ஏற்படுத்தியது. ஆயினும் அமெரிக்க யங்கி ஏகாதிபத்தியத்தால் கொலாட்டை அடிபணியவைக்க முடியவில்லை. இவ்விரண்டு ஆண்டுகளில் கொலாட் செய்த மாபெரும் 'குற்றங்கள்—'

1. அந்நிய மூலதனத்தைக் கட்டுப்படுத்தியது.

2. தேசிய வளத்தைப் பெருக்க முயற்சிகள் எடுத்தது. உதாரணம்: பிரேஸில் அரசாங்க எண்ணெய்க் கம்பெனியான ''பெட்ரோ பிரேஸ்'' (நமது 'லங்கா பெட்ரோல்' போல்) 63-ம் ஆண்டு 3,700,00000 கலன்கள் சுத்திகரித்தது.

3. நில உடைமைக்கு ஒரு எல்லை விதித்தது.

4. சுதந்திர வெளிநாட்டுக் கொள்கை (கியூபாவுடன் நட்பு.) கடைப்பிடித்தது.

5. அரசாங்க ஸ்தாபனங்களில் தொழிலாளரை நிர்வாகிக்க நியமனம் செய்தது.

உதாரணம்: ''பெற்ரோபிரேஸ்'' மூன்று இயக்குநர்களில் இருவர் தொழிலாளிகள்.

அமெரிக்க முதலாளித்துவத்தை அவ்வளவாக இச்சீர்திருத்தங்கள் பாதிக்கா விட்டாலும் கூட, ''ஜனநாயகத்தின் பாதுகாவலனுலும்'' முன்னேற்றத்தின் நண்பனுலும்'' இவற்றினை சகிக்க முடியவில்லை.

பின்னர் நடந்தது: அமெரிக்க தலையீட்டில், (லத்தீன் அமெரிக்காவில் வழமைபோல்) அரசாங்க கைப்பாவை ஜனுதிபதியானதும்; கியூபா தூதுவர் தன் நாடு பறந்ததும்; ஹங்கேரி தூதுவராலயத்தின் உள் சென்று படைகள் அட்டகாசம் செய்ததும்; சீனப்பிரஜைகளை கைது செய்ததும்; கொம்யூனிஸ்ட் கட்சி கலைக்கப்பட்டதும் தினசரிகளில் மூலம் தெரிந்ததே

★

கொலாட், படையினர் எதிர்த்தபோதும், மக்கள் ஆக்ரவில் தலைமை யேற்ருர்! மக்கள் நலம்பெற பல சீர்திருத்தங்கள் செய்தார்! ஒன்றரை ஆண்டுகள் முன் நடந்த ஒரு இடைக்கால வாக்கெடுப்பில் மக்கள் தங்கள் தலைவன் மேல் கொண்டுள்ள நம்பிக்கையை பிரமாண்டமான வகையில் தெரிவித்தனர். ஆயினும் அவர் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. இதனுல் ஆனந்தம் அடைந்தவர்கள் பிரேஸில் மக்களா?

முழுப்பிற்போக்கு பத்திரிகையான இந்தியன் எக்ஸபிரஸ் கூட ''கொலாட் தலைமையிலிருந்து தள்ளப்பட்டாலும் பொது மக்கள் ஆதரவையும் மதிப்பையும் இப்போதும் பெறுகிருர். ஆயினும் லத்தீன் அமெரிக்கா ஆட்சிக்கவிழ்ப்புகளில் மக்கள் பொதுவாக பார்வையாளராகவே இருக்கிருர்கள்'' என்கின்றது.

[ஏப்ரில் 5, பக் 4]

★

கவிழ்ப்பு நடைபெறும் போது புரட்சிகர தொழிற் சங்கங்கள் கொலாட் அரசாங்கத்திற்கு ஆதரவாக வேலை நிறுத்தம் தெய்தன. மற்றைய மக்கள் சக்திகளை பங்கு கொள்ளச் செய்ய முடியவில்லை. முயலவில்லை.

கொலாட் மட்டுமல்ல முற்போக்கு சக்திகள் விட்டபிழைகளில் முக்கியமானவைகளில் சில.

1. அரசியலில் மக்களை பார்வையாளராக்கி, அவர்கள் பங்குபற்ற வாய்ப்புகள் அளிக்காதது. அதாவது சரித்திரத்தில் தலைவன் மக்கள். இவர்களின் பங்குகளை பயன்படுத்தாதது. உதாரணமாக பெட்ரோ பிரஸ் கூட்ஸ்தாபனத்திற்கு தொழிலாளிகளை இயக்குநர்களாக நியமித்ததும் அவர்களில் சிலரை அமெரிக்கா ஏஜன்ட்கள் லஞ்சம் கொடுத்து வாங்கினுர்கள். இதனுல் பெட்ரோ பிரேஸ் இயக்குநர்கள் 2 ஆண்டுகளில் நான்குமுறை மாற்றப்பட வேண்டி ஏற்பட்டது. தொழிலாளரின் முழுப்பொறுப்பில் கூட்டுஸ்தாபனத்தை அமைத்தல் அல்லது இயக்குநர்களை தேர்ந்தெடுப்பது தொழிலாளர்களைக் கொண்டு என்பவை ஏற்படுத்தப்படவில்லை.

2. விவசாய; தொழிலாள சங்கங்களை புரட்சி வழியில் ஏற்பாடுகள் செய்யத்தவறியது.

3. ஆட்சிப்பொறுப்பேற்ற கொலாட் கெடுபிடி இராணுவ படைகளின்சக்தியைகுறைத்த மக்கள் படையை அமைக்கத் தவறியது.

★

அரசாங்கப்பொறுப்பை முற்போக்கு வாதிகள் ஏற்ருலும் புரட்சி வழிகொண்டு மக்கள் சக்தியை பலப்படுத்தி அரசாங்க இயந்திரத்தைத்தளர்த்தி உடைத்தெறியாவிட்டால் பிற்போக்குச் சக்திகள் (உள்ளும் புறமும்) பயன்படுத்தும் என்ற எமது கொள்கைக்கு இன்னுமோர்சான்று பிரேஸிலில் நடைபெற்ற ஆட்சிக் கவிழ்ப்பு. மக்கள் சக்திதான் சரித்திரத்தில் முக்கியம் என்பதை மறுப்போரைமறுமுறை சிந்திக்கவைக்கும் இக்கவிழ்ப்பு இலங்கையின் முற்போக்கு சக்திகள் புரட்சி வழியில் முன்னேற பிரேஸில் படிப்பினை வழிகாட்டும்.

---

# ஆசிய ஆபிரிக்க ஐக்கியத்துவச் சங்கத்தை சிதைக்க சீர்குலைவாளர் நடவடிக்கை

## சங்கத் தலைவி தேஜா குணவர்த்தன அறிக்கை

இலங்கை ஆசிய-ஆபிரிக்க ஐக்கியத்துவச் சங்கத்தின் விசேஷ அங்கத்தவர் கூட்டம் 22-4-64 மாலை 5-30 மணிக்குச் செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

25-4-63-ல் நடைபெற்ற வருடாந்த அங்கத்தவர் கூட்டத்தைச் செல்லுபடியற்றதாக்கவும், புதிய செயற் கமிட்டியைத் தெரிவுசெய்யவும் விரும்பிய சில அங்கத்தவர்கள் இக்கூட்டத்தை நடத்தக் கோரினர்.

கோரிக்கைக்கு ஒப்பமிட்டவர்களில் மூவர் மட்டுமே பிரசன்னமாயிருந்தனர். இந்த அங்கத்தினர்கள் இவ் விசேஷ கூட்டத்தைச் செல்லுபடியாகாதென முடிவுசெய்ய ஒழுங்குப் பிரச்சனைகளைக் கிளப்பினர். கோரப்பட்ட கூட்டம் சங்க அமைப்பு விதிகளுக்கிணங்கக் கூட்டப்பட்டுள்ளதெனக் கூட்டம் கருதியதால் இந்த ஒழுங்குப் பிரேரணைகள் நிராகரிக்கப்பட்டன.

காரியதரிசி, சம்பவங்களின் பின்னணியை விவரித்துக் கூட்டத்திற்குத் தாம் சமர்ப்பித்த அறிக்கையில், அஸீஸ் கோஷ்டியைப் பிளவுக் கோஷ்டியென வர்ணித்துக் கூறினுர்.

''ஐக்கியப் பான்மை இருக்க வேண்டும் என இந்தக்கோஷ்டி என்றுமே கருதியதில்லை. 1964, ஜனவரி கூட்டத்தின் பின்னர் பிப்ரவரியிற் கூட்டம் கூட்டாது விட்டது, ஐக்கியப் பான்மையை அடையக் காலம் இருக்க வேண்டிச் செயற் கமிட்டியின் விருப்பப்படி வேண்டுமென்றே செய்யப்பட்டதாகும். ஆனுல் ஐக்கியப்பான்மை இருக்கவேண்டுமெனப் பிளவுக் கோஷ்டி என்றுமே கருதியதில்லை. மார்ச் 22.ம் திகதிய அல்ஜீரியர்ஸ் கவுன்சில் கூட்டத்திற்கு இலங்கையிலிருந்து ஒரு பிரதிநிதியை அழைக்கும் தந்தியொன்று, மார்ச் 7-ம் திகதி கெயிரோவிலிருந்து கிடைத்தது. 12-4-64-ல் ஒரு கூட்டத்தைக் கூட்டி அன்றே (மார்ச் 7-ம் திகதி) அறிவித்தல் அனுப்பப்பட்டது. அஸீஸ் கோஷ்டி இக் கூட்டத்தில் பங்கு பற்றி, தங்கள் அபேட்சகரை அனுப்பத் தவறியதும் வெளிநடப்புச் செய்தனர்.

''இப்போது அவர்கள் தங்கள் உண்மை உருவத்தில் எமது சங்கத்தைப் பிளவுபடுத்தவும் சாத்தியமானுல் இரண்டாகப் பிரிக்கவும் உறுதிபூண்ட ஒரு பிளவுக் கோஷ்டியாக வெளிப்பட்டுள்ளனர். இதை ஒரு முறை அறிந்துகொண்டதும் சங்க அங்கத்தினர்கள் இதை அனுமதிக்க மாட்டார்களாகையால், இது வெற்றிபெருது.

''பிளவுக் கோஷ்டி அனைத்துக்கும் ஆட்சேபம் கிளப்புகிறது. வருடாந்த அங்கத்தவர் கூட்டத்தில் தாம் விரும்பியதைச் சாதிக்கத் தவறிய பின், அவர்கள் மூன்று வாரங்கள் கழித்து அதன் சரியான தன்மைக்கு ஆட்சேபம் கிளப்பினர். பின்னர் அவர்கள் ஓர் இரகசியக் கூட்டம் நடத்தி அல்ஜிரியர்ஸிற்கு அனுப்பப்பட்ட எமது பிரதிநிதிக் குழுவிற்கு ஆட்சேபம் கிளப்பத் தீர்மானித்து, தங்கள் முதல் அபேட்சகரல்லாது மிக அண்மைக் காலத்திற் சேர்ந்த ஒரு அங்கத்தவரையும் இப்போதும் அங்கத்தவரேயல்லாத ஒருவரையும் அனுப்பினர். இவர்கள் இருவரும் அல்ஜிரியர்ஸில் சரியான முறையில் முகத்திற் கரிபூசப்பட்டு அங்கு நடந்த எமது இயக்கத்தின் 6-வது கவுன்சில் கூட்டத்தால் நிராகரிக்கப்பட்டனர். அவர்கள் (பிளவுக் கோஷ்டி) ஒரு விசேஷ அங்கத்தவர் கூட்டத்தைக் கோரிவிட்டுப் பின்னர், இப்போது நாம் அதனைக் கூட்டியிருக்கும்போது அதன் சரியான தன்மையைப் போலிக் காரணங்களுக்காக ஆட்சேபிக்கின்றனர்...... பிளவுக் கோஷ்டியின் கோரிக்கைப்படி கூட்டப்பட்ட சங்கத்தின் இந்தச் சீர்குலைவு நடவடிக்கைகளை ஐயந்திரிபற்ற பதங்களில் கண்டனம் செய்து, நிலைமையைக் கையாள அவசியமான நடவடிக்கைகளை எடுக்கச் செயற் கமிட்டிக்கு அதிகாரம் வழங்க வேண்டும்,''

பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:

1. இலங்கை ஆசிய-ஆபிரிக்க ஐக்கியத்துவச் சங்கத்தின் இந்த விசேஷ அங்கத்தினர் கூட்டம், கவனமான பரிசீலனைக்குப் பின்னர், 25-11-63-ல் நடந்த வருடாந்த அங்கத்தினர் கூட்டத்தில் நடந்த தலைவர், செயற் கமிட்டித் தெரிவுகள் அமைப்பு விதிகளுக்கிையைந்தவையும் செல்லுபடியானவையும்எனத் தீர்மானிக்கிறது.

1. 23ம் திகதியன்று ஒரு விசேஷ அங்கத்தினர் கூட்டத்தை, இலங்கை ஆசிய—ஆபிரிக்க ஐக்கியத்துவச் சங்கத்தின் பேரிற் கூட்டுவதற்கான சில அங்கத்தினர்களின் முயற்சியை இந்த விசேஷ அங்கத்தினர் கூட்டம் பலமாகக் கண்டிக்கிறது.

3. இதுநாள்வரை செயற் கமிட்டியினுல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும், அது அவசியமெனக் கருதும் மேற்கொண்ட எந்த நடவடிக்கையையும் எடுப்பதையும் இந்த விசஷ அங்கத்தவர் கூட்டம் அங்கீகரிக்கிறது.

(ஒப்பம்)

தேஜா குணவர்த்தன

தலைவர், இலங்கை ஆசிய-ஆபிரிக்க ஐக்கியத்துவச் சங்கம்

# வெற்றிக்கு மேல் வெற்றி
## சம்மேளனத்தின் சரியான தலைமை

சென்ற ஆண்டு மே தினத்திற்குப் பிற்பட்ட காலத்தில் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம், அதன் புரட்சிகர பாரம்பர்யத்தையும்தலைமையையும்திரிபுவாதச் சீர்குலைவாளர்களுக்கு எதிராகப் பாதுகாப்பதில் சிறந்த வெற்றிகரமான அனுபவம் கண்டுள்ளது.

சி, டி. யு.எப் வரலாற்றில், இக்கால கட்டத்தில் நடைபெற்ற மகத்தான சம்பவம் அதன் 16வது மாநாடும்,பின்னர் சீர்குலைவாளர்கள்அதனைப் பிளவு படுத்த எடுத்த முயற்சியுமாகும். சி. டி. யு. எப். தொழிலாள வர்க்கத்திற்கு அளித்த சரியான போராட்டத்தலைமையினுலும் அதற்கும் மேலாக, மற்ற எந்தத் தொழிற் சங்க மத்தியஸ்தானத்தையும் விடக் கூடுதலான பொருளாதாரக் கோரிக்கைகளைச் சி. டி. யு. எப். கடந்த இரண்டு, மூன்ருண்டுகளில் வென்றெடுத்தபடியாலும், சி. டி.யு. எப்.இலங்கையில் உள்ள மிகவும் பலம் வாய்ந்த தொழிற் சங்க மத்தியஸ்தானங்களுள் ஒன்ருகக் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் சி. டி. யு. எப், தொழிலாளர்களுக்குப் புரட்சிகர அரசியல் போதத்தை அளிப்பதிலும் வெற்றிகண்டுள்ளது. சொற்பொழிவுகள் மூலமும், சி. டி. யு. எப். ஏடுகளான 'கம்கறுவா'' ''தொழிலாளி'' ஆகியவற்றின் மூலமும் தொழிலாள வர்க்கத்திற்கு தத்துவ ஆயுதத்தைச் சி. டி. யு. எப். அளித்தது.

இவையனைத்தும் அரசாங்கத்தையும் முதலாளிமார்களையும் கலக்க ஆரம்பித்துள்ளது. எப்பொழுதும்போல முதலாளிவர்க்கத்தின் நலனுக்காகவே செயல்படும் திரிபுவாதிகளுக்கும் இந்நிலைமை அதிருப்தியைக் கொடுத்தது. அவர்கள் பலம் வாய்ந்த சி. டி. யு. எப். ஐச் சீர்குலைக்கவும் பலவீனப்படுத்தவும் முயற்சிகள் எடுத்தனர். ஆனுல் இம் முயற்சி பரிதாபகரமான தோல்வியில் முடிந்தது. மாநாட்டிலேயே பெரும்பான்மையான பிரதிநிதிகளையும் பார்வையாளர்களையும் தனது மானங்கெட்ட வெளிநடப்புடன் தன் பின்னுல் இழுத்துச் செல்ல எம். ஜி. மெண்டிஸ் எடுத்த முயற்சி படுதோல்வி அடைந்தது. ஒரு சில பிரதிநிதிகளும் பார்வையாளர்களுமே அவரைப் பின்பற்றிச் சென்றனர். மிகக் கூடுதலான பெடும்பான்மை மாநாட்டில் தங்கி இருந்து, சீன, வியட்நாம், கொரியா, இந்தோனேஷிய சகோதரப் பிரதிநிதிகளுடன் மாநாட்டை வெற்றிகரமாக நடாத்தினர்.


மாநாட்டிற்குப் பின் ஒரு போட்டித் தொழிற்சங்க மத்தியஸ்தானத்தை ஆரம்பித்தும், சி.டி.யூ.எப். பொதுக் காரியதரிசி தோழர் சண்முகதாசனுக்கு எதிராக வகுப்புவாதத் குரலைக் கூட எழுப்புவது உட்பட்ட தமது கீழ்த்தரமான சீர்குலைவு நடவடிக்கைகள் மூலமும், தொழிலாளர்களின் சில பகுதியினரை சி. டி. யூ, எப். பிலிருந்து விலகி சீர்குலைவாளர் களின் சம்மேளனத்தில் சேரச்செய்த துரதிருஷ்டம் உண்மையே. முக்கிய அரசாங்கப் பகுதிகளின் பகிரங்கஆதரவும் ஆசியும் இத்தகைய சீர்குலைவு நடவடிக்கைகளில் அவர்களுக்குக் கிடைத்தது. திரிபுவாதத் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவின் நெருங்கிய சொந்தக்காரரரான தொழில் மந்திரி, எம். ஜி. மெண்டிஸின் மைத்துனரான தொழில் இலாகாவின் நிரந்தரக் காரியதரிசி, மற்றும் தொழில் இலாகாவின் உயர்தர உத்தியோகஸ்தர்கள் இவ் ஆதரவை அளித்தனர். இப் 'பெருந்தகைகள்' முன்னென்றுமில்லாத முறையில் எம். ஜி. மெண்டிஸின் சில கைத் தொழில் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு ஒத்தாசை புரிந்தனர். தொழிற் சங்க இயக்கம் வட்டாரம் அனைத்திலும் இக் கெட்ட கூட்டு பற்றியும் பேச்சடிபட்டது. சர்வதேசிய ரீதியிலும், கிழக்கு ஐரோப்பிய சோஷலிஸ நாடுகளின் சக திரிபுவாதிகளும், மவுசிழந்த இந்திய டாங்கேக் கும்பலும் பெரிய குண்டாந் தடிக்குப் பணிந்து மெண்டிஸ்—கெனமனின் சீர்குலைவாளர் மாநாட்டில் திரண்டு வந்து கலந்து கொண்டனர்.

இத்தகைய முறைகெட்ட உதவிகள் அனைத்தும் இருந்த பொழுதும், சி. டி. யு. எப். அங்கத்தவர் தொகையில் மிகவும் சிறியதோர் விகிதத்தையே அவர்கள் உடைக்க முடிந்தது. சி. டி. யு. எப். அங்கத்தவரில் 70—80 சதவிகிதம் தங்கள் பக்கம் வந்துவிட்டதாகப் புளுகித் திரிகின்ருர். ஆனுல் இப் புளுகின் வண்டவாளம் மார்ச் 21-ம் திகதி ஊர்வலத்தின் பொழுது வெளியாகியுள்ளது. கெனமன் 500 பேரைத் தானும் ஊர்வலத்தில் கலந்துகொள்ளத் திரட்ட முடியவில்லை. ஆனுல் சி. டி. யு. எப்போ எல்லா அறிக்கைளின் படியும் மிகவும் பிரமாண்டமான ஊர்வலத்தை அத்தினத்தில் திரட்டியிருந்தது. சி. டி. யு. எப்பின் ஸ்தாபன பலம் திரிபுவாதிகளிலும் பார்க்க மட்டுமல்லாது, இடதுசாரி இயக்கத்தின் மற்றைய சீர்திருத்தவாதிகளிலும் கூடுதலானது சிறந்தது என்பதை மே தினம் திரும்பவும் நிரூபிக்கும்.

இத்தகைய தப்பான, விஷமத்தனமான பிரச்சாரத்திற்குக் காது கொடுத்தும், சிறிய ஒரு பகுதியினரே தவருன பாதையில் இழுத்துச் செல்லப்பட்டது சி. டி. யு. எப். அங்கத்தவர்களின் அரசியல் உணர்வுக்கும், வகுப்புவாத மற்ற கண்ணேட்டத்திற்கும் அதிசிறந்த எடுத்துக்காட்டாகும். அதே நேரத்தில் தொழிலாளர்களின் புதிய பகுதிகள் சி. டி. யு. எப்பில் பெருவாரியாக அணிதிரள்கின்றன. வாக்கெடுப்பில் 89% வீதம் எமது அங்கத்தவர் எனத் தெரிய வந்த பாடா சப்பாத்துக் கம்பெனி இவற்றுள் குறிப்பிடத்தக்கதாகும். ரத்மலானை, கிராண்ட்பாஸ், ரத்னபுர, கப்புத்தளை போன்ற இடங்களில் சி. டி. யு. எப். கிளைக்காரியாலயங்கள்திறக்கப்பட்டுள்ளன. திரிபுவாதிகள் பிளவை முயற்சித்த தினத்திலிருந்து கூட சி. டி. யு. எப். புதிய வெற்றிகளைக்கண்டுள்ளது. அண்மைக் காலத்தில்பொருளாதார வெற்றிகள்ஈட்டிய பகுதிகள் சில: பி. சி. சி. லிமிட்டெட் தொழிலாளர்கள், வெள்ளவத்தை ஆலைப் பெண் தொழிலாளர்கள், கொழும்பு அப்போதிக்கரிஸ்(அச்சுப் பகுதி). சிடி கரியர்ஸ்,அயிட்கன் ஸ்பென்ஸ் அன்ட் கம்பெனி லிமிட்டட் (அச்சகப் பகுதி), சினிமாத் தொழிலாளர்கள் முதலியவர்கள்.

சீர் குலைவாளர்களின் முயற்சிகள் அனைத்தும் தோல்வி கண்டன. பல கஷ்டங்களும் எதிர்ப்பும் இருந்த பொழுதும், மிகவும் பலம் வாய்ந்த தொழிற்சங்க மத்தியஸ்தானமாக மட்டுமல்லாது, 21 கோரிக்கைகளை உடனடியாகச் சமப்பிப்பதற்காக தொழிற்சங்க இயக்கத்தின் மற்றைய பகுதிகளுக்கு சரியான தலைமை கொடுப்பதிலும், இக் கோரிக்கைகள் சம்பந்தமாக ஐக்கிய முற்ற கூட்டுப் போராட்டத்தை ஒழுங்கு படுத்துவதிலும், தனியொரு தொழிற் சங்க மத்தியஸ்தானத்தை விரைவில் அடையப் போராடுவதிலும் சி. டி. யு. எப். வெற்றிகரமாக வீர நடை போட்டு முன்னேறிச் செல்கிறது.

-நமது தொழிற் சங்க நிருபர்






நீர்வை பொன்னையன்
(சி. டி. யூ. எப். யாழ்-பிரதேசப் பிரதிநிதி)

# பீடித் தொழிலாளர் போராடத் தயார்

"எந்த ஒரு தொழிற் சங்கமும் தனித்துநின்று போராடி தனது கோரிக்கைகளை வென்றெடுக்க முடியாது. இலங்கையிலுள்ள பீடித் தொழிலாளர்கள் இத்தீவின் பல பாகங்களிலும் சிதறுண்டு ஸ்தாபன இணைப்பின்றி இருப்பதின் காரணமாக பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள முதலாளிகள் தொழிலாளர்களை நசுக்க முற்படுகின்றனர். பீடிப் புகையிலை சந்தையில் இல்லை என்று கூறிக்கொண்டு, தொழிலாளர்களை எவ்வித முன்னறிவித்தலுமின்றி வேலையிலிருந்து நீக்குவது, பிரவிடன்ட் நிதி வசதி அளிக்காதது, வேலை உத்தரவாதம் அளிக்காதது போன்ற தொழிலாளர்களின் உரிமைகளைத் தட்டிக்கழிக்கும் ஜனநாயகமற்ற செயலை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. பீடிப் புகையிலை மார்க்கெட்டில் இல்லையானுல் அப் புகையிலையை இங்குள்ள கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனங்களினூடாக இறக்குமதி செய்து அத்தொழிலை விஸ்தரிப்பதைவிடுத்து, தொழிலாளர்களை நிர்ப்பந்திப்பது தகுந்த செயலல்ல'' இவ்வாறு அண்மையில் நடைபெற்ற வட-பிரதேச பீடித் தொழிலாளர் சங்கக் கூட்டத்தில், இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனப் பிரதிநிதி திரு. ஆர். பொன்னையா கூறினூர்.

கூட்டத்திற்கு திரு. இ.ஆர். மூர்த்தி தலைமை வகித்தார். கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன:

1. பீடித் தொழிலாளர்களாகிய எமது பிரச்சனைகளைத் தீர்க்க நாம் நடத்தும் போராட்டங்களுக்கு, சகல தொழிற் சங்கங்களுடைய ஆதரவையும் தரும்படி எல்லாத் தொழிற் சங்கங்களுக்கும் அறைகூவல் விடுகின்ருேம்.

2. இலங்கையிலுள்ள சகல தொழிற் சங்கங்களும் முன் வைத்த 21 கோரிக்கைக்கான போராட்டத்திற்கு எமது சங்கமும் பூரண ஆதரவையும், ஒத்துழைப்பையும் கொடுக்கின்றது. (ந.நி.)

# கோரிக்கை கிடைத்தது

1958ம் ஆண்டுக்குப்பின் காங்கேசன் சீமேந்து தொழிற் சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களின் உயர் தரம் (அப்கிறேடிங்) செய்யப்படவில்லை. இதுவிஷயமாக கடந்த பிப்ரவரி மாதம் 21ம் திகதி தொழிலாளர்களுக்கும் சீமேந்து கூட்டுத்தாபன நிர்வாகிகளுக்கும் நடந்த பேச்சுவார்த்தையில், இரண்டு மாதகாலத்திற்குள் கிறேடிங் செய்வதாக நிர்வாகம்ஒப்புக்கொண்டது. தொழிலாளர் சார்பில் தோழர் நா. சண்முகதாஸன் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார். நிர்வாகம் ஒப்புக் கொண்டதன்படி தற்பொழுது கிறேடிங் நடக்கிறது. ஆனுல் கிறேடிங் செய்யும் பொழுது,தொழிற்சங்க வேலைகள் செய்த சில தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டிருக்கிருர்கள். இத்தொழிலாளர்கள் திறமை வாய்ந்த தொழிலாளர்களாக விருந்தும் இவர்கள், கிறேட் பண்ணப்படவில்லை. நிர்வாகத்தின் வஞ்சம் தீர்க்கும் இப்போக்கு வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியது. அத்துடன் பிப்ரவரி 21ம் திகதி நடந்த பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொண்ட ஏனைய கோரிக்கைகளையும் உடன் கொடுக்கும்படி வேண்டிக்கொள்ளப் பட்டுள்ளது.காங்கேசன் சீமேந்துதொழிலாளர்கள்இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தோடு (சி. டி.யூ.எப்) இணைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(ந.நி)

இலையே உணவிலையே கதி
இலையே எனும் எளிமை
இனிமே லிலை எனவேமுர
சறைவாய் முரசறைவாய்!

—பாரதிதாசன்

# மேதினமும் எமது கடமையும்

**எம். எம். செனிவிரத்தின**
பொதுச் செயலாளர், இலங்கைப் பொதுத் தொழிலாளர் சங்கம்.

இலங்கையில் இவ்வாண்டு மே தினம் மிகவும் முக்கியமானதோர் கட்டத்தில் நடைபெறுகிறது. இம் மேதினம் தொழிற் சங்கங்களில் இணைந்துள்ளவர்கட்கு மட்டுமல்லாது முழுத் தொழிலாள வர்க்கத்துக்கும், பொதுமக்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

எமது நாட்டு உழைக்கும் வர்க்கத்தினர் மிகுந்த இக்கட்டான நிலையில் வாழ்கின்றனர். நாளுக்கு நாள் பொருட்களின் விலையும் வாழ்க்கைச் செலவும் உயர்கின்றது.

ஆனல் 1959-ல் இருந்து சம்பளத்தில் எதுவித மாற்றமும் கிடையாது. இத்தகைய நிலையில் சம்பள உயர்வுக்காக தொழிலாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஆனல் இடதுசாரித் தலைவர்கள் என்று கூறப்படுபவர்கள் தமது புரட்சிகரப் பாதையைக் கைவிட்டு, சம்பள உயர்வுக்குப் போராடாது தொழிலாள வர்க்கத்தைக் காட்டிக்கொடுப்பதற்கு முன் நிற்கின்றனர்.

1958-ல் தனியார்துறைத் தொழிலாளர்க்கு அரசாங்க அளவு பஞ்சப்படி அளித்தல் வேண்டும் என்று இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் கோரியதன்படி, அரசாங்கத்துடனும் முதலாளிமார்களுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றிகாணுது விடவே 30,000க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். அப் போராட்டத்தை அரசாங்கமும் முதலாளிமார்களும் ஒன்றுகூடித் தோற்கடித்தனர். ஆனல் இதனல் பின்னடையாது சி.டி.யு.எப். அளித்த சரியான தலைமையின் காரணமாக 1959, மே 1-ம் திகதி தொடக்கம் தனியார்துறைத் தொழிலாளருக்கு அரசாங்க அளவு பஞ்சப்படி கிடைத்தது.

சென்ற வருடங்களில் நடந்த போராட்டங்கள் போலிசினலும், பட்டாளத்தினலும், கருங்காலிகளாலும் சீர்குலைக்கப்பட்டது, இத்தகைய தொழிலாளர் விரோத அரசாங்கத்துடனும், லஞ்சம் முதலிய மோசடிகளில் ஈடுபடும் மக்கள் விரோத அரசாங்கத்துடனும், இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தி மந்திரிப் பதவி பெறச் சில 'தொழிலாளர் தலைவர்கள்' நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இவர்கள் 21 கோரிக்கைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கின்றனர். அவர்கள் நீண்டகாலம் தொழிலாளர்களை ஏமாற்ற முடியாது என்பது நிச்சயம்.

இத் தொழிலாளர் துரோகிகளைத் தொலைத்து விட்டு புதியதோர் புரட்சிகரத் தொழிலாளர் தலைமையை நாம் காணுதல் வேண்டும். உண்மையான தொழிலாளர் ஆட்சியை ஏற்படுத்தக் கூடிய முன்னணிக்கு நாம் தலைமையளித்தல் வேண்டும். அதற்காகப் பிரமாண்டமான போராட்டத்தில் ஈடுபடத் தயாராகுதல் வேண்டும். தனியொரு தொழிற்சங்க மத்தியஸ்தானம் உடனடியாகஸ்தாபிக்க நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

21 கோரிக்கைகள் வெல்வோம், தொழிலாளர் ஆட்சி காண முன்செல்வோம்!

## புரட்சிகர உள்ளம் படைத்தோரே கம்யூனிஸ்ட் கட்சியில் சேருவீர்

இலங்கை இன்று மிகவும் நெருக்கடியான காலகட்டத்திற் கூடாகச்செல்கின்றது. யூ.என்.பி.யையும் வலதுசாரிகளையும் மக்கள் தீர்க்கமாக வேண்டாமெனத் தள்ளியுள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரதிநிதித்துவப் படுத்தும் மத்திய சக்திகள் தமது முடிவுப் பாதைக்கு வந்து விட்டனர். இந் நேரத்தில் முழு நாடுமே இந் நெருக்கடியிலிருந்து மீளுவதற்குத் தலைமை பெறுவதற்காக இடதுசாரி இயக்கத்தின் பக்கம் திரும்புகின்றது.

இத்தகைய நெருக்கடியான கட்டத்தில் தான் இடதுசாரி இயக்கத்தின் தலைமை சமரச நாடகம் ஆரம்பித்துள்ளது. 30வருட செழுமைமிக்கபுரட்சிகரபாரம்பர்யத்துக்குத் துரோகம் செய்கின்றது. செல்வாக்கிழந்த, தொழிலாளர் விரோத ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு முண்டு கொடுப்பது பற்றி இடதுசாரி ஐக்கிய முன்னணியில் இணைந்துள்ள இடதுசாரிக் கட்சிகள் விரும்பும் அளவிற்கு சீர்திருத்தவாதமும் திரிபுவாதமும் இடதுசாரி இயக்கத்துள் ஊடுருவியுள்ளன.

இத்தகைய சந்தர்ப்பத்தில் தொழிலாள வர்க்கத்தின் நலனைக் கருத்திற் கொண்ட புரட்சிகரக் கொள்கையை, மாக்சிஸ-லெனினிஸ இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே கொண்டுள்ளது. இடதுசாரி இயக்கத்தைச் சீரழிக்கும் சீர்திருத்த வாதம், திரிபுவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் அது தலைமை தாங்குகின்றது; முதலாளித்துவ வர்க்கத்துடன் விளையாட்டுக்காகப் போட்டி நடாத்தும் பாராளுமன்றக் கட்சிகளாக மட்டும் இடதுசாரிக் கட்சிகள் மாறுவதை எதிர்த்துப் போரிடுவதிலும் அது தலைமை தாங்குகின்றது.

இவை அனைத்தையும் திருத்தி, புரட்சிகர இயக்கத்தை சரியான பாதையில் இட்டுச் செல்வதற்கு பலம் வாய்ந்த, தீவிரமாகச் செயல்படும் கம்யூனிஸ்ட் கட்சி அவசியமாகும். எமது 7-வது மாநாட்டிற்கு முன் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் கடந்தகாலத் திரிபுவாதத் தலைவர்கள் செய்த கொலைகாரக் குற்றங்களில் ஒன்று, கட்சியின் புதிய அங்கத்தவர்கள் இணைவதைத் தடுத்ததும் அதனை ஸ்தாபன ரீதியாகப் பலவீனப் படுத்தியதுமாகும். திரிபுவாதிகள் எமது கட்சியின் கதவுகளில் தொங்கவிட்ட "இடம் காலி இல்லை" விளம்பரப் பலகையை எமது 7-வது மாநாடு தூக்கி வீசியது. நாம் இப்பொழுது எமது பழைய மாக்சிஸ-லெனினிஸத் தோழர்களைத் திரும்பவும் பதிவு செய்வதை முடித்து விட்டோம். இப்பொழுது புதிய உறுப்பினர்களை, குறிப்பாகத் தொழிலாள வர்க்கத்திடமிருந்து துணிவுடன் கட்சியில் சேர்க்கிறோம்.

எமது மாக்சிஸ-லெனினிஸ வேலைத் திட்டத்தையும் கொள்கையையும் ஏற்றுகொள்ளும் தோழர்கள் கட்சி அணிகளுக்கு வெளியே நில்லாது உடனடியாகக் கட்சியில் இணைந்து, தொழிலாள வர்க்கத்திற்குப் புரட்சிகரத்தலைமை அளிப்பதற்கு எங்களுக்கு உதவுமாறும், சீர்திருத்தவாதம், திரிபுவாதத்திற்கெதிராகத் தொழிலாள வர்க்கத்தைப் பாதுகாக்க உதவுமாறும் நாம் புரட்சிகரத் தோழர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுகிறோம். இலங்கை அரசியலின் இன்றைய சந்தர்ப்பத்தில், மாக்சிஸ-லெனினிஸ விஞ்ஞானக் கொள்கைகளின் அடிப்படையில் அமைந்த புரட்சிகரத் தொழிலாள வர்க்கக் கட்சியைக் கட்டி எழுப்புவது எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்கக் கூடியதாகும். மறு வார்த்தைகளில் கூறுவதானல், லெனின் முன்வைத்த புதிய ரகக் கட்சியை நாம் கட்டி எழுப்புதல் வேண்டும்.

1964-ம் ஆண்டு மே தினத்தில் எமது கட்சியில் சேருமாறு எல்லாப் புரட்சி வாதிகளையும் தோழமையுடன் அழைக்கின்றோம். விபரங்களுக்கு எங்களுக்கு எழுதுங்கள்.


தேசிய அமைப்பாளர்,
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி

123, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2

● 1-ம் பக்கத் தொடர்

மூளையைச் சற்றுப் பாவிக்க முடிந்தவர்களுக்குப் பதில் தெளிவு. அரசாங்கத்தின் சமுதாய குணத்தை, வர்க்க சுபாவத்தை கற்றுத் தெளிந்து கொள்கை அடிப்படையில் இப் பிரச்சினைகளை அணுகாது, ஆட்களைப் பார்த்து இவற்றினைத் தீர்மானிப்பது மார்க்ஸிய அறிவியல் கண்ணேட்டத்திற்கு விரோதமானதாகும். இடதுசாரித் தலைவர்கள் எனப்படுபர்களின் இம் முதலாளித்துவ கண்ணேட்டம் வெறும் சந்தர்ப்பவாதத்தின் விளைவே.

## சரித்திர மேதினம்



தோழர் வாட்சன் பர்ணந்து
தலைவர், சி.டி.யு.எப்.

இலங்கைத் தொழிலாள வர்க்கம் முக்கிய சரித்திர கட்டத்திற்கு வந்துள்ள இக் கால கட்டத்தில், இவ்வாண்டு மே தினம் அவர்களுக்குப் புதிய, சரியான பாதையைக் காட்டுவதில் பெரும் பங்கு வகிக்கும் என நான் நம்புகின்றேன்.

பட்டினிக் கொடுமைக்கு காரணமாகவும், பிரேதக் குவியல்களை தினம் தினம் குவித்துக் கொண்டிருப்பதுமான ஏகாதிபத்தியத்தையும், உழைப்பாளரைச் சுரண்டும் கொடுமுறையின் உருவமான முதலாளித்துவத்தையும், அநாகரிகமான மிருகத்தனமான நிலப்பிரபுத்துவ முறையையும் பூண்டோடு ஒழித்து விட இவ்வாண்டு மேதினம் ஈழத்துத் தொழிலாள வர்க்கத்திற்கும் பொது மக்களுக்களுக்கும் உதவட்டும்.

இப்பணிகளைப் பூரணமாக்கி பாட்டாளி வர்க்கப் பொன்னுலகான சோஷலிச சமுதாயத்தை நிர்மாணிப்பதற்குஈழத்துத் தொழிலாள வர்க்கத்துக்கு இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம்தலைமையளிக்கும் என உறுதியளிக்கின்றோம்.

## புத்துணர்வு பெற்றெழும் பாட்டாளி வர்க்கம்



தோழர் ஏ. ஆர். எட்மன்ட்.
உப தலைவர், சி.டி.யு.எப்.

மே முதலாம் திகதி உலகத் தொழிலாள வர்க்கத்தின் ஒப்புயர்வற்ற திருநாளாகும். உழைக்கும் மக்கள் தமது கடந்தகாலப் போராட்டங்களை மனதில் நினைவுறுத்தி, எதிர் காலப் போரட்டங்களுக்காகத் தம்மைத் தயார் செய்துகொள்ளும் தினம் மேதினம். இதைக் குறிக்குமுகமாக கூட்டங்கள், ஊர்வலங்கள், பேரணிகள் உலகெங்கும்இத்தினத்தில்தொழிலாளர்களால் நடத்தப்படுகின்றன.

நமது நாட்டில், பிளவுபட்டிருந்த தொழிலாளர் வர்க்கத்தை ஒன்றுபடுத்தி அவர்களை சோஷலிசம் காணும் பாதையில் போர் முரசுகொட்டி வீரப்பவனிவரச் செய்தல் வேண்டும். இதனை எதிர்த்து நிற்கும் ஏகாதிபத்திய வாதிகள், முதலாளிகள், அரசாங்கம். அண்மையில் வெளிவந்துள்ள நவீன திரிபுவாதிகளை எதிர்த்து நாம் ஈவிரக்கமற்ற போராட்டம் நடாத்தல் வேண்டும். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு உடனடியாக 21 கோரிக்கைப் போராட்டத்தில் வெற்றிகாணுதல் வேண்டும், தனியொரு தொழிற்சங்க மத்தியஸ்தானம் காணுதல் வேண்டும். இவற்றை நிறைவேற்றும் பொழுது தொழிலாள வர்க்கத்தின்உண்மை நண்பர்கள் யார் எதிரிகள் யார்என்பது தெரியவரும்.

இவ்வாண்டு மேதினத்தை உலக ரீதியிலும், தேசிய ரீதியிலும் புரட்சிகர சக்திகள் புத்துணர்வு பெற்றெழுந்துள்ளதைப் பிரதிபலிக்கும் மேதினம் எனக் குறிப்பிடலாம். தொழிலாளர்களின் போராட்ட உணர்வைத் தூண்டிவிடும் இம் மேதினம் எமது நாட்டு முற்போக்கு சக்திகளுக்கு அவசியமான உந்துதலை அளிக்கும் என எதிர்பார்க்கலாம். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம், இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனம் நடாத்தும்கூட்டு மேதினம் இவையனைத்தையும் விளக்கும் வகையில்அமையும்.

நமது தொழிற் சங்க பலத்தைப் பெருக்கி, தொழிலாளர் வர்க்க ஐக்கியத்தைவளர்த்து, முதலாளித்துவத்தை அடியோடு புதைத்து, ஆனந்த வாழ்வு அமைக்கும் போராட்டத்திற்கு இவ்வாண்டு மேதினம் வழிகாட்டுவதாக!

பதிப்பித்து வெளியிடுபவர்: அசன் மொஹிதீன் பக்கீர் மொஹிதீன், 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. அச்சிட்டது: தொழிலாளி அச்சகம், 9, டிமெல் வீதி கொழும்பு-2

# 21 கோரிக்கைகள் வென்றெடுப்போம்